சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்." தாபிதம் : 1876

காவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்

தொலைபேசி : 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு வைகாசிமீ 2-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 17-ம் இல.

சத்தியவேத பாதுகாவலன்

வருடசந்தா

இலங்கை : வெளிநாடுகள் :

ரூபா 9-00

(தபாற்செலவு உட்பட)

தனிப்பிரதி சதம் 15

நியூயோர்க் உலகசந்தைத் திறப்புவிழா

இணையற்ற வத்திக்கான் வீடு

எப்போது அந்நாள்வரும்என்று உலகம் கண்இமை வெட்டாது நியூயோர்க் உலகசந்தையின் திறப்புவிழாவை எதிர்பார்த்து நின்றது. இம்மாதம் 22-ம்திகதி ஆடம்பர மத்தியில் ஜனதிபதி ஜோன்சன் இக்காட்சியைத் திறந்துவைத்தார். முதல் நாளிலே ஒருகோடிமக்கள் இந்த நவீனகாட்சியைப் பார்த்து மகிழ்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. சரித்திரத்திலே என்றும் இல்லாச் சிறப்புடையது இக்காட்சியென்று கூறப்படுகின்றது.

இதன் பெருமைக்குப் பங்கம் வராத முறையிலே, இதன்கீர்த்திக்குரிய காரணங்களில் ஒன்றாக விளங்கக்கூடிய பான்மையிலே, அங்கு அமைக்கப்பட்டிருக்கின்ற வத்திக்கான்வீடு விளங்குகின்றது. திருச்சபையானது யேசுக்கிறீஸ்துநாதரின் ஞானச்சரீரம் என்று யாவரும் விளங்கிக்கொள்ளக்கூடிய தன்மையில் வத்திக்கான்வீடு அமையவேண்டும் என்பது 6-வது சின்னப்பபாப் பரசரின் ஆவல்; இவரது ஆவல் பூர்த்தியாகிவிட்டது.

சிவபூசையில் கரடிதூறுக்கிட்டதுபோல இக்கோலாகலவைபவத்தில் உலகவனத்தைத் தம்பால் இழுத்துக்கொள்ள நீகிரோ மக்களின் ஒருசாரார் முயன்றிருக்கின்றனர். அமெரிக்காவில் நீகிரோ மக்களுக்குச் சமஉரிமை வழங்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்த இது ஒருதகுந்த சமயம்என அவர்கள் நினைத்திருந்தனர். போக்குவரவை ஸ்தம்பிக்க அவர்கள் முயற்சி எடுத்து வந்ததாகச் செய்திகள் கூறின. ஆனால், திறப்புவிழாவின் பின் வந்த செய்திகள் அசம்பாவிதமாக ஒன்றும் நடந்ததாகக் கூறவில்லை.

உலக மகாகவி சேக்ஸ்பியர்

அவரது 400ஆண்டு நிறைவுவிழா

இங்கிலாந்தில் 400 ஆண்டுகளுக்குமுதற் பிறந்து உலகமகாகவியாகப் பெயர்பெற்ற ஷேக்ஸ்பியர் அவர்களுக்கு இம்மாசம் 23-ம் திகதி, அவர் பிறந்த இடமாகிய அவண் நதியின் ஸ்திராட்பேட் பட்டணத்தில் உலக சங்கதேசங்கள் 115 இன் பிரதிநிதிகளும் அஞ்சலி செய்தார்கள். புலவர் அவர்களின் ஞாபகமாகக் கட்டி எழுப்பப்பட்ட மாபெரும் மன்றத்தில் யாவருங்கூடி பல்லாயிரமக்கள் கரகோஷம்செய்ய ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதியும் மன்றத்தின்முன் உள்ள முற்றத்தில் தன்தன் நாட்டுக்கொடியைக் கட்டவிழ்த்துப் பறக்கவிட்டனர்.

எலிசபேத்மகாஇராணி அனுப்பிய செய்தி வைபவத்தில் ஒலிபெருக்கிமூலம் வாசிக்கப்பட்டது. "ஷேக்ஸ்பியர் எமது நாட்டுக்கும் அகில உலகுக்கும் அளித்த நன்மை அளப்பரிதாகும் அவர் உலகைக்கண்டு உணர்ந்ததுபோல வேறு எவரும் உணர்ந்திலர். அவருடைய அனுபவங்கள்யாவும் இன்று அவரது நூல்களின் மூலம் அகில உலகுக்கும் உரிய அரிய சொத்தாகும் இவரை உலகுக்கு ஈந்த பெருமை எமது நாட்டுக்குக் குன்றாப்புகழ் அளித்திருக்கிறது." இதுவே மகாஇராணியாரின் செய்தியின் சுருக்கம் சாதிமத எல்லைகளைக் கடந்தவரும், இனபாகுபாடுகளினாலும் அரசியல் குரோதங்களினாலும பங்கம் விளையப்பெறாதவரும் உலகம் உள்ளளவும் என்றும் மறக்கப்படாது இருக்கப்போகும் ஒரு மாபெரும் மனிதன் ஷேக்ஸ்பியராகும்.

பயந்த மனப்பான்மை வேண்டாம்

"நாம் சிறுபான்மையினர்தான். ஆனால், எமது நாட்டில் எமக்கு உரிமைகள் உண்டு. இந்த உரிமைகளைக் கோருவதற்கோ, சரியென்று நாம் கொண்டவற்றின்படி நடப்பதற்கோ எமக்கு ஒரு பயமும் இருக்கப்படாது. பயம் பிடித்தவர்களாய் 'நாம் சிறுபான்மையினர்தானே, நடப்பதைக் கண்டுகொள்ளுவோம்' என்று ஒதுங்கி நிற்போமானால் எமது உரிமைகளுக்குப் பெரும் ஆபத்து ஏற்படும். தொகையளவில் சிறுபான்மையினராயினும், எமது சிறப்பினாலும், முயற்சியினாலும் அக்குறைவை நிறைத்துவிடலாம்." இவ்வாறு அண்மையில் சென்னைமாநகரில் நடந்த அகில இந்திய கத்தோலிக்க சங்கக் கூட்டத்தில் சங்கக் காரியதரிசி திரு. சொவாறெஸ் ஆற்றிய சொற்பொழிவில் கூறினர்.

பம்பாய் சற்பிரசாத மகாநாட்டின் ஞாபகசின்னம் எதுவோ?

இவ்வருடம் கார்த்திகைமாதம் பம்பாய்நகரில் நடக்கஇருக்கும் சற்பிரசாத மகாநாட்டின் ஞாபக சின்னமாக யாது செய்யத்தகும் என்னும் சிந்தனை பம்பாய்நகர அதிமேற்றிராணியாராகிய கருதினல் கிரூசியாஸ் அவர்களையும், அவரது சகஇந்திய மேற்றிராணிமாரையும், பிரபல்ய இந்திய கத்தோலிக்க இல்லறத்தோரையும், பிறரையும் தொட்டிருக்கின்றது.

பின்வரும் எண்ணங்கள் அவர்கள்மனதில் இருப்பதாகத் தெரியவருகிறது.

1. ஆதரவற்று அலைந்து திரிகிறவர்களை உபயோகமான வழிப்படுத்த நகரின்அண்மையில் 100 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் வழிகாட்டும் இல்லம் நிறுவுவது. சாதிமத இனபேதமின்றி உண்மையாகவே ஆதரவற்று அலைந்து திரிகிறவர்களுக்கு இல்லிடம் அளித்து, உகந்தவேலைகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கும், சமூகத்துக்கும பிரயோசனமான முறையில் கொண்டுநடத்துவது. இது ஒருபொது சமூகத்தொண்டாகும.

2. மறுயோசனைகள் சமய வளர்ச்சியைச் சார்ந்தனவாம்.

(அ) கத்தோலிக்க சமயஅறிவு வளர்ச்சி நிலையம் நிறுவுவது. இங்கிலையத்தில் ஒருபொது நூல்நிலையத்துடன கத்தோலிக்க நூல்நிலையமும் சேர்ந்திருக்கும். விவாத சதுக்கமும், கடிதத் தொடர்பு ஏற்படுத்தும் தொழில் அகமும் மறுஅம்சங்களாகும்.

(ஆ) சற்பிரசாத மகாநாட்டின் பின் சற்பிரசாதநாதரின் சதாஎழுந்தேற்றம் உரியமரியாதையுடன் என்றும் பம்பாய்நகரில் நடந்துவர உகந்த ஒருகோவில் அல்லது துறவிச்சாலை நிறுவுவது.

தேவன் இந்த ஆலோசனைகளை நல்வழிப்படுத்தி அவை விரைவில் உருப்பெறக் கிருபைகூர்வாராக!

ஒற்றுமைக்கு அடிப்படைக் காரணம் கத். சமயமே

"கெயிசாய் ஒருய்" என்ற யப்பானிய சஞ்சிகை கத்தோலிக்க வேதத்தைப் பெரிதும் புகழ்ந்து கூறியிருக்கின்றது. பழையகாலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் இருந்த ஒற்றுமைக்கு அடிப்படைக்காரணம் கத்தோலிக்க சமயமே. இரண்டாம் உலகயுத்தத்தின்பின்பு ஐரோப்பா மாண்டுபோகாது அதை நிலைநிறுத்திவைத்ததும் கத்தோலிக்க வேதமே. கத்தோலிக்க பாப்புமார் சரித்திரத்தின் எக்காலத்திலும் சமாதானத்துக்காக உழைத்ததுபோல் வேறு யார்தான் உழைத்திருக்கின்றனர்" என வினவுகின்றார் அச்சஞ்சிகை ஆசிரியர்.

பாப்பரசர்கொடுத்த இருவிளக்கங்கள்

● "சங்கசருமங்கள் இப்போது இருக்கும் நிலைமையில் 2-ம் வத்திக்கான் சங்கம் இவ்வருட கூட்டங்களுடன் முடிவுபெறும் என்று ஒருவராலும் சொல்லிக்கொள்ள முடியாது. 1965-ம் ஆண்டுக்கும் வேலை இருப்பதாகவே நமக்கு இன்று தோன்றுகின்றது. சங்கத்தின் வேலைத்திறமையைக் கூட்டுவதும், வேலையைத் துரிதப்படுத்துவதுமேதவிர, சங்கத்தில் நடக்கவேண்டிய ஆலோசனைகளை எவ்வகையிலும் குறைத்துக் கொள்ளும் எண்ணம் நமக்கு இல்லை"—இவ்வாறு பாப்பரசர் அண்மையில் நடந்த இத்தாலிய தேச மேற்றிராணிமார் மகாநாட்டில் கூறியருளினர்.

● சில நாட்களின்முன் வட அத்திலாந்து ஒப்பந்த தேய உயர் இராணுவ குழுவினர் உரோமை நகரில் ஒன்றுகூட நேரிட்டது. சந்தர்ப்பத்தை உபயோகித்து அவர்கள் பாப்பரசரையும் சந்தித்தனர். அவர்களை உபசரித்துப்பேசுகையில் பரிசுத்ததந்தை பின்வருமாறு கூறினர்.

"பாப்பரசர் எப்பொழுதும் மனுக்குலத்தின் ஒழுக்க சம்பந்தமானதும், சமய சம்பந்தமானதுமான விஷயங்களிலே ஈடுபடுவதே பொருத்தமாகும். அரசியல் விஷயங்களும், பொருளாதார கருமங்களும், இராணுவ கைங்கரியங்களும் பாப்பரசரின் அதிகாரத்துக்கும் கடமைக்கும் அப்பாற்பட்டவையாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கித்தேரியம்மாள்

கர்த்தரின் அருளால் கித்தேரி கீழ்த் திசையினும் பற்பல புதுமை கல்கினாள். அதைத் தமிழ்நாடு அகிலமும் அறிந்திருந்ததால், வீரமாமுனிவர் "காலும் கனி செய்புதுமை காட்டிலறி யாரு முண்டோ" எனச்சுருங்கக்கூறிவிளங்க வைத்தார். காவிரியின் வடகரையில், திருக்காவலூர் அடைக்கலமாதா அருட்காவலில், கித்தேரி அன்பிரங்கி காலும் நிகழ்த்தும்புதுமையை வியந்து புகழுகிறார்; வேண்டித் துதித்து, கற்பலங்காரக் காதை ஏடுகட்டுகிறார்.

இனி, திரு. சேதுப்பிள்ளையின் பொழிப்புரை:

கித்தேரியின் திருமேனி பொம்பேரு மலையிற் படிந்து ஆண்டுபல கழிந்தன. அன்னாள் தவமேனி தங்கிய சூழலில், கொடிகளும் செடிகளும் முளைத்து எழுந்து நறுமணம் கமழ்ந்தன. காலஞ் செல்லச் செல்ல கித்தேரி ஆற்றிய அற்புதச் செயல்களே மாந்தர் மறக் தொழிந்தார். இங்ஙனம் பலநூற்றாண்டுகள் கழிந்தபின்னர் பொம்பேரு மலையின் அண்மையில் அமைந்த பொக்கை தகல்லூரில் வைகிய ஒரு மாது சிலக்கி நோயுற்றுச் சாலவருந்தினள். மருத்துவர் அருந்திய மருந்தினைத்தும் சிறிதும் நலம் பயவாமையால், ஊணுறக்கமின்றி உலைந்து வாடிய அன்னாள், நோதலிற் சாதலே நன்றென்று கருதினாள். அந்நிலையில் அருள் வாய்ந்த ஆன்றோரொருவர் அம்மங்கையின் மனையகம் போந்து நோயின் தன்மையை நாடி அறிந்து,

"மண்ணிடத்தில் ஒருமருந்தும்
வாய்த்தபயன் இல்லதெனில்
விண்ணிடத்தில் வாழ்பவரை
வேண்டிலருள் செய்வரென்றார்."

அவ்வுரைகேட்ட மாது அகங்குழைந்தழுது அவர் பணித்தவாறே முழுக இசைந்தாள். அன்னாள் செம்மனங் கண்டு பரிவுகூர்ந்த சானோர், "பொம்பேரிடத்தாளைப் புகழ்மிகும் கித்தேரியை வேண்டினால் வெம்பேரிட நோயும்" எனக்கூறி மறைந்தார். அம்மொழிகளே மறைமொழியாகக் கொண்டு, பிணியுற்ற மங்கை அருளுருவாய கித்தேரியை அன்புகூர்ந்து வேண்டினாள். அன்றிரவு என்றுமில்லாத தோர் அசதிகொண்டுறங்கினாள். மறுநாட்காலையில் துயிலொழிந் தெழுந்த பொழுது பன்னாள்பற்றிநின்ற வன்பிணியைக் காணுது வியப்புற்றாள். தான் கண்ட காட்சி கனவோ, கனவோ என்று ஐயுற்றாள். புண்ணிருந்த இடமும் தெரியாதவாறு நெடும் பிணியைத் தீர்த்தொழித்த புதுமையைக்கண்டார் அதிசயிக்கக் காட்டினாள்; கருணை சான்ற கித்தேரியைக் கைகூப்பி வாழ்த்தினாள். உடல், பொருள், ஆவி மூன்றையும் அன்றே அங்கங்கையிடம் ஒப்புவித்தாள். சிலக்கியை ஏவித் தன்னை வலிந்தாட்கொண்ட வானரசியைப் பொம்பேரு மலையிற்கண்டு அருள்பெற விரும்பினாள். அருளறம்பூண்ட கித்தேரியை மனக்கோயிலிலமைத்துப் பொம்பேரு மலையின்மீதேறினாள். புற்றும் மரமும் பொருந்திய மலையில் கித்தேரி இருந்து அருந்தவம் புரிந்த இடத்தினைக் காணுது அலக்கணுற்றாள். அம்மலையில் வாழ்ந்த மாந்தரிடம் அவ்வம்மையைக் குறித்து வினவிய பொழுது, அன்னார் ஒன்றுமறியாது திகைத்து நின்றார். அப்பொழுது வானவனே சான்றோனாய் வந்துரைத்த செய்தியையும், அன்னன் உரைவழியே கித்தேரியை நோக்ததையும், அந்நிலையில் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்ததையும், எழுந்தபொழுது கடும்பிணி தீர்ந்தொழிந்ததையும், அம்மாந்தரிடம் எடுத்துரைத்தாள். அன்றுமுதல் பிணியுற்றார் பலர் அம்மலையிற் போந்து கித்தேரியின் அருள் நிறைந்து தொழுது அரும்பயன் கண்டார்.

பன்னாள் தலைநோயால் துயருழந்த ஒரு மாது பொம்பேரு மலையம்மையின் பெருமையைக் கேள்வியுற்று,

"தன்சிரத்தைத் தன்கரத்தால்
தாங்கிநடக் தாளிரங்கி
என்சிரத்தின் நோயழிய
இன்றுதயை செய்யாளோ"

என்று மனம் குழைந்து வேண்டினாள். அப்பொழுதே தலைநோய் தீர்ந்தொழியக் கண்ட அந்நல்லாள், தன்னினைய பிறரும் அன்னையின் அருள்பெற்று உய்தல் வேண்டுமெனக் கருதிப் பொன்னால் கித்தேரியின் உருவம்செய்து பொம்பேரு மலையில் நிறுவினாள். நற்றவ மங்கையின் திருவுருவை அம்மலையில் நிறுவும்பொழுது வான்முகில் நன்னீர்த்துளி வழங்கி ஆர்த்தொலித்தது. புள்ளினங்கள் மகிழ்ந்து பண்ணுர்ந்த பாட்டிசைத்தன.

"வானுலப்பப் பார்மகிழ
மன்னுயிர்கள் தீதொழிப்பத்
தானுவந்து மீண்டொருகால்
தன்மலைவந் தாண்டிருக்க
கிணை சலத்தெழுந்த
கேழொளிவாய்ச் சூரியன்போல்
கருணைசலத் தெழுந்தாள்
காசறுகித் தேரியன்றே"

இவ்வாறு, பொம்பேரு மலையில் அமைந்த கித்தேரியின் திருவடி தொழுது பிணிதீர்ந்தார் பல்லாயிரவர். விண்ணினின்று வீசிய மின்னொளியால் கண்ணொளி இழந்த ஒரு காரிகை மணியிழந்த கல்லணிபோல் பொலிவழிந்து நின்றாள். எழுதியபாவை போன்ற அவ்வழகியைப் பார்த்தோர் அனைவரும் பரிவுகூர்ந்தழுதார்; கராது தொழும் அடியார் குறைதீர்த்தருளும் கித்தேரியை வேண்டினர். அப்பொழுது கண்டோர் வியப்புற மின்னுக்கொடி ஒன்று மேகத்தினிடையே தோன்றிற்று. அவ்வாறொளியின் வண்மையால் கண்ணிழந்த நங்கை மீண்டும் கண்ணொளி பெற்றாள். பொம்பேரு மலையேறிக் கித்தேரியம்மனைக் கண்ணாரக் கண்டு போற்றினாள்.

ஓர் ஊரில் வீதியிலே விளையாடிய ஒரு நங்கை அணிந்திருந்த நல்லணியினின்று கழன்ற மணியொன்று அவள் காதினுள்ளே புகுந்து செவியகத்தைச் சிக்கென அடைத்தது. பல்லாற்றான் முயன்றும் அம்மணி வெளிப்படாமையால் பன்னீராண்டு மங்கை செவிநோயால் துன்புற்றாள் கித்தேரியின் கருணையைக் கேள்வியுற்ற அவள் பெற்றோர், அன்பு நிறைந்த மனத்தினராய் அவ்வம்மையின் அருளே வேண்டினர். வேண்டியார்க்கு வேண்டிய எல்லாம் எய்துவிக்கும் கித்தேரியின் கருணையால் பல்லாண்டு செவியில் நிலைத்திருந்த மணிதானாகப் பெயர்ந்து விழுந்தது. ஆண்டு பலவாக அடைபட்டுத் தூர்ந்தவாயில் திறந்தபொழுது மங்கை எல்லையற்ற இன்பமுற்றாள். மற்றொரு மாது குடர் நோயுற்று ஆற்றாது கொடுந்துயருற்றாள். பொல்லாத சூலை நோய் தீர்க்கும் வகையறியாது எல்லாரும் கைவிட்டார். அந்நிலையில் அருள்வாய்ந்த ஒரு மடவாள் கித்தேரி அம்மையின் அடியின் மேலிட்ட மலரை எடுத்துவந்து உடல் பதைத்துக் கிடந்த மாதின் உந்தியின்மேல் வைத்தாள். அன்னையின் அடிதோய்ந்த மலர் அவள் மேனியிற் பட்டபோது கவ்குற்றொழுதும் துயிலாத மாது நல்லுறக்கங் கொண்டாள். நெடும் பிணியையும் நொடிப்பொழுதில் நீக்கவல்ல கித்தேரியின் அருள் நிறைந்து உருகினாள். கித்தேரி கோவில்கொண்டருளிய பொம்பரு மலையில் நோன்பிருந்து நோய் தீர்ந்தார் எண்ணிறந்தவராவர். அவ்வம்மன்மேல் ஓதிய கண்ணீர் மாந்தர் உறுகுறை தீர்க்கும் அருமருந்தாய் அமைந்தது. அன்றியும் இருந்தவராக எண்ணப்பட்டோர் சிலர் கித்தேரியின் அருளால் கல்லறையினின்றும் தப்பிப் பிழைத்தனர். ஒருநாள் நோய்முதிர்ந்த ஒருமாது மேனி வற்றி வாய்வறண்டு உடல் குளிர்ந்தாள். அக்குறிகளைக் கண்ட உற்றார் உறவினர் அவள் இறந்தாளெனத் துணிந்து சாவுடையும் சாத்தொடையும் வருவித்தார். உயிர்ப்படங்கக்கிடந்த மாது கித்தேரியை உள்ளத்தில் நினைந்து தொழுதமையால் உறங்கி எழுந்தவள்போல் புரண்டெழுந்தாள்.

"சாந்துடனும் முன்னே
தனக்கமைத்து வைத்திருந்த
பூந்தொடையும் பூந்துகிலும்
பொம்பேரு நங்கையின்முன்
தானிடவந் திவ்வுயிரைத்
தந்தனனீ என்றிறைஞ்சி
கானிடவெம் பூம்புகையும்
காட்டிஅடி வாழ்த்தினளால்"

ஒருநாள் ஆற்றங்கரையில் விளையாடப்போந்த ஐந்தாண்டுப் பாலனொருவனை ஓடும்புனல் இழுத்துச் சென்றது. புனல்வாய்ப்புகுந்த பாலனைக் கரையிலிருந்து கண்டானொருவன் விரைந்தோடிச் சென்று அவன் அன்னையிடம் அறிவித்தான். திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையென்று கருதிய நற்றாய் தவறி விழுந்த மைந்தனைத் தேடுதற்குச் சிலமலலரை அனுப்பினாள். அவர் கரைநெடுகச்சென்று ஆழநெடும் புனலில் மிதந்து சென்ற மைந்தனுடலைக் கண்டெடுத்துத் தாயினிடம் கொண்டு சேர்த்தார். பிணம்போற்கிடந்த பிள்ளையைக்கண்டு பேதுற்ற நற்றாய் பொம்பேருமலை அம்மையை நினைந்தாள்.

"கேடறியா வல்லமைகொள்
கித்தேரி உன்தயையால்
நாடறிய இக்குழந்தை
நல்கெனக் கென்றழுதாள்."

அந்நிலையில் தரையிற்கிடந்த பாலன் நகைமுகம் காட்டிக் கண்திறந்தான். தாயின் கண்ணீரைக்கண்டு தரியாது, தானும் கண்ணீர் சொரியத் தலைப்பட்டான். இப்புதுமையைக் கண்டவரும் கேட்டவரும் பொம்பேரு மலையிருந்த திசைநோக்கி வணக்கம் போக்கினர்.

(தொடர்ச்சி 6-ம்பக்கம்)

வாழ்வாங்கு வாழ.....!

ஏ. பி. வி. கோமஸ், பி. ஏ.

"எல்லாருக்கும் அவன்மேல் ஒரு விதப் பிடிப்பு." இப்படிக் கூறினான் என் நண்பன் ஒருவன், எங்களின் இன்னொரு நண்பரைப்பற்றி. அது உண்மைதான். அப்படியென்றால் அவனிடம் மற்றவர்களைக்கவரக்கூடிய ஏதாவது ஒரு சக்தியிருக்கவேண்டும் இல்லையா? இந்தச் சக்தியைத்தான் நாம் அவனின் 'தனித்தன்மை' என்கிறோம்.

இந்தத் தனித்தன்மை எவ்வாறு உண்டாகிறது? வேறு ஒன்றுமல்ல, நம்மிடம் காணப்படுகின்ற சிறுசிறுகுணங்களின் கூட்டுத்தொகைதான் இது. நம்மின் வழக்கங்கள்; நம் திறமைகள்; நம் பேச்சுவன்மை; நம் புன்முறுவல்; நம் நடை; நம் உடை இவையெல்லாவற்றையும் சேர்த்து "நாம்" என்ற ஒரு கயிற்றால் ஒன்றாகக் கட்டும்போது இந்தத் தனித்தன்மை என்பது உருவாகிறது. ஆமாம், நம்மின் இந்த ஒவ்வொரு குணமும் ஒவ்வொருமுத்து. இம்முத்துக்களை "நாம்" என்ற கயிற்றால் பிணைக்கும்போது தான் "தனித்தன்மை" என்ற முத்தாரம் உருவாகிறது. சிலவேளைகளில் இம்முத்தாரம் பிரகாசிக்கலாம். சிலவேளைகளில் நம்மைப் பரிகசிக்கலாம். ஆனால்.....

என்றும் இம்முத்தாரம் பிரகாசித்து ஜொலி ஜொலிக்கச் செய்வதுதான் ஒவ்வொருவரின் கடமையாக இருக்க வேண்டும்.

கவர்ச்சியுள்ள தனித்தன்மையை வளர்த்துக்கொள்வதற்குச் சில உயர்ச்சியுள்ள மூலப்பொருள்கள் உள்ளன. அவைகளை நான் தருகிறேன். நீங்கள் அவைகளை வைத்துக்கொண்டு ஆக்கப் பொருளை ஆக்கிக்கொள்க. ஆமாம், நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா.....?

அன்பில் பெரும்பங்கை எடுத்துக் கொள்க. அத்துடன் அடக்கமுடைமையைச் சேருங்கள். கொஞ்சம் நன்றியறிதலையும் சேர்த்துக்கொள்ளுங்கள். அத்துடன் எந்த விஷயத்தையும் சமாளிக்கும் சக்தியையும் சேர்த்துக் கொள்ளுங்கள்; இத்துடன் அழகாக நடவுங்கள்; அருமையாகப் பேசுங்கள்.

இவையெல்லாம் ஒன்றாகி ஒரு பண்பட்ட இதயத்துக்குள் தள்ளப்பட வேண்டும். பின் அந்த இதயத்தை ஒரு சுத்தமான உடல் அணைக்கவேண்டும். அந்த உடலைத் தூய்மையான உடைகள் மூடவேண்டும். இவையெல்லாம் போதுமா? உம் உம் போதவே போதாது. இவற்றுடன் கொஞ்சம் நகைச்சுவையையும் சேருங்கள்; உங்களிடம் இருந்தால் அத்துடன் மனைதிடம், தன்நம்பிக்கை எதையும் தாங்கிக் கொள்ளும் தன்மை, மன ஒருமைப்பாடு இவைகளையும் சேர்த்துக்கொள்ளுங்கள். மேலும்.....

நேர்மை, உண்மை, கபடற்றதன்மை, சொற்தவறுமை, வாக்குறுதி காப்பாற்றும்தன்மை முதலியவைகளையும் சேர்த்து...தர்மம் என்னும் புடமிட்டு வந்தால் நாம் முன்னால் சொன்ன அம்முத்தாரம் என்றும் பிரகாசிக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

எல்லாம் சரிதான். இவையெல்லாவற்றையும் எங்குபோய்த் தேடுவது என்றுதானே என்னிடம் கேட்கிறீர்கள்? நான் என்ன சொல்லட்டும்? இவையெல்லாம் நீங்களாகத் தேடிக்கொள்ளவேண்டிய பொருள்கள். யாரும் கொண்டுவந்து கையில்கொடுக்க முடியாது. ஆனால், இங்குதான் நம் நாதராகிய யேசுக்கிறிஸ்துவையும், அவரின் போதனைகளைச் சாதனைகளில் காட்டிய அர்ச். பிரான்சிஸ் அசிசியையும் நாம் கொஞ்சம் சந்திக்கவேண்டியிருக்கிறது. ஓ...இதோ அவர்களே வந்துவிட்டார்கள். இதோ யேசுக்கிறிஸ்து.....

ஆகா, எவ்வளவு கவர்ச்சிகரமான தோற்றம். சாந்தமான முகம். காந்தம் போன்ற புன்முறுவல். அல்லாமலும், இதயத்தில் காணும் இரக்கத்தைத் தரித்திருக்காக, செயலில் காட்டுவது தானே எல்லாவற்றிற்கும் மேலான குணம். மண்ணுலகில் வாழும்போது நம் மன்னவர் செய்யாததா என்ன! அவரின் முதற்புதுமையே அவரின் இரக்கத்தைக் காட்டுவதாகத்தானே இருந்தது. இல்லையா? கல்யாணமாப் பிள்ளை, ஆமாம் தனக்கு விருந்தளிக்கும் நல்லவர், ரசம் தட்டுப்பட்டால் என்னபாடு படுவார் என்பதை அறிந்து தானே தண்ணீரை ரசமாக்கினார். எவ்வளவு இரக்கம்! எவ்வளவு அன்பு! நமக்கு இப்படிப் புதுமைகள் செய்ய முடியாது. ஒப்புக்கொள்கிறேன். ஆனால், நம்மால் இயன்ற அளவு நலிவுற்றவர்களுக்கு உதவிகள் செய்ய முடியாதா என்ன?

அதோ அர்ச். பிரான்சிஸ். ஏழைகளின் காவலர். எல்லாருக்கும் நல்லவர். ஒருநாள், அதிகமாக உபவாசமிருந்ததால் நள்ளிரவில் பசியால் துடித்த நபருக்கு, உடனடியாகக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்து, அத்துடன் தனிமையில் அங்கபர உண்ணக் கூச்சப்படுவார் என்று தானும் உண்ணவில்லையா? எவ்வளவு அன்பு; எவ்வளவு பிறர்சிநேகம்.

இவர்கள் சரித்திரத்தை நாமும்படிப்போம். இவர்கள் சென்றவழி நாமும் செல்வோம். சென்றால்.....எல்லாரையும் கவரக்கூடிய தனித்தன்மையை நாம் சம்பாதித்துக் கொள்வோம் என்பதில் சந்தேகமேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்சத்திலே மேதினம்

(செல்வி ரோசா சாமுவேல்)

அன்று மோட்சத்தில் ஒரே அமர்க்களம்! ஆரவாரம்! ஏனென்று கேட்கவேண்டும்? அங்கும் மேதினவிழா கொண்டாடப்படுகிறது. மேதின மாதவர் சூசைத்தாத்தா நந்தவனத்தில் அமைந்திருந்த உல்லாச மேடையில் அமர்ந்திருந்தார். அர்ச்சியசிஷ்டர்களும், தூதரும், அதிதூதர்களும் சோபனவாழ்த்துக்களை நாள்முழுவதும் வழங்குவதில் மூழ்கிருந்தனர். நாதகிருத்தியர் வீணைமீட்டி மதுரகானத்தால் யாவரையும் மெய்மறக்கச் செய்துகொண்டிருந்தனர். தேவதாய், கன்னியர் உதவிபுரிய நறுமணப் பூக்களை மாலையாகத் தொடுத்துக்கொண்டிருந்தாள். குழந்தை யேசு இடையிடையே தமது விளையாட்டுத் தோழர்களை விட்டுவிட்டு, ஓடிவந்து சூசைத்தாத்தா அருகில் அமர்ந்து மழலை மொழி பேசிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்.

ஆனால், சூசைத்தாத்தாவைச் சூழவர உட்கார்ந்திருந்த பாலசம்மனசுகளுக்கோ அன்று எதுவுமே பிடிக்கவில்லை. பாலர்களரியில் இருந்து விடுப்பட்டிருந்த அவைகளின் விளையாட்டுக்கள் எதிலும் சூசைத்தாத்தா ஆர்வம் காட்டவில்லை. அவர் கண்களோ தமக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த தெலிவிஷனில் உலகில் தமது மகிமையைக் கொண்டாடும் முகமாக நடைபெறும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களில் லயித்திருந்தன. அங்கிருந்த மிகச்சிறிய சம்மனசொன்று கூம்பிய முகத்துடன் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தது. அதன் பெயர் எல்மோ. அதனுடைய சிறிய மரக்குதிரையின் காலொன்று உடைந்துவிட்டிருந்தது. மற்றநாட்களென்றால் இதுவரையில் சூசைத்தாத்தா அதைச் செப்பனிட்டுக் கொடுத்திருப்பார். எல்மோ தேவமாதாவை ஒருதரம் திரும்பிப் பார்த்தது. "இன்றைக்கு உலகத்திலிருப்பவர்களது மன்றாட்டுக்களுக்கு அவர் செவிசாய்க்கவேண்டும். ஆகவே, சூசைத்தாத்தாவுக்கு கரைச்சல் கொடுக்கக்கூடாது" என்று அன்னைமரி கூறியிருந்தது நினைவுக்கு வந்தது.

அவளைத் திரும்பிப்பார்த்துப் பார்த்து, அடிமேலடிவைத்து, சூசைத்தாத்தாவுக்குக்கிட்டேவந்து சேர்ந்தான் எல்மோ. சூசைத்தாத்தா அன்பாக எல்மோவை அரவணைத்துக்கொண்டார். "தாத்தா! தயவுசெய்து...என்னுடைய சினனக்குதிரை...ஒடிந்தகால்" என்று மழலைமொழி பேசியது. ஆர்வத்துடன், "உஸ்.....அங்கே பார்" என்று தெலிவிஷனைக்காட்டினார் சூசைத்தாத்தா. அதைப் பார்த்துக்கொண்டிருந்த எல்மோவின காதுகளில "தெலிபோனில்" அடிக்கடி ஒலித்துக்கொண்டிருந்த மன்றாட்டுக்களும் காதில் விழுந்தன. எல்மோவுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. "என்ன தாத்தா! அவர்கள் உமக்கு வாழ்த்துக்கள் வழங்கவில்லையே! ஒரு பரிசுகளும் அனுபபவில்லையே! நாங்களெல்லாம் காலையில் எவ்வளவு வாழ்த்துக்கள் பரிசுகள் வழங்கினோம். போயும் போயும் தங்களுக்கு வேண்டியவற்றைத் தானே கேட்கிறார்கள்" என்று அலுத்துக்கொண்டது திரும்பவும் திரும்பவும் இதையே சொல்லிச் சொல்லி முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அப்போது பேதுருவானவர் அவ்வழியாக வந்துகொண்டிருந்தார். திறப்புக் கோர்வைகளுடன் தமது மேற்பார்வை அலுவல்களைக் கவனித்துக் கொண்டே வந்தவர் சூசைத்தாத்தா அருகே முணுமுணுத்துக் கொண்டிருந்த எல்மோவையும் அதன் மரக்குதிரையும் கண்டுவிட்டார். அவரைக் கண்ணுற்ற எல்மோ சூசையப்பரின் போர்வைக்குள் அடைக்கலம் புக முனைந்தது. அந்தோ! பாவம்! அதன் காதைப் பிடித்துத் தூக்கினார் பேதுருவானவர். "உன்னை யார் இங்கே வரச் சொன்னது? மேதின விழாவில் சூசைத்தாத்தாவைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று தெரியாதா? என்றார் கண்டிப்புடன். "தெரியும்! தெரியும்! ஆனால், இந்த உலகத்துச் சனங்கள் தமக்கு வேண்டியதைத் தானே கேட்கிறார்கள்" என்று கதையை மாற்ற முனைந்தது எல்மோ. உஸ்!... என்று வாயில் விரலைவைத்துச் சைகை காட்டினாள் அன்னைமரி. "சரி! இப்போது நீ பாலர்களரிக்குப் போய்விடலாம். நானே சூசைத்தாத்தா உனது மரக்குதிரையைச் சரிசெய்து கொடுப்பார்" என்றவாறு அதைத் தோளின் மேல் வைத்தக்கொண்டே பாலர்களரியை நோக்கி விரைந்தார் பேதுருவானவர்.

சூசைத்தாத்தா நாற்புறமும் பார்த்தார். அர்ச்சியசிஷ்டவர்களெல்லாம் ஆங்காங்கே மரநிழலில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். உண்டகளைப்புத் தொண்டருக்கு முண்டல்லவா? அன்று மேதின விழாவையொட்டி மதியபோசனம் சற்றுப் பலமாக இருந்துவிட்டதென்னவோ உண்மைதான். மெதுவாக எழுந்தார். தச்சுமாலைநோக்கி விரைந்தார். தேவதாய் இதைக் கவனித்தாள். எனினும் கண்டும் காணாததுபோலிருந்தாள். சூசைத்தாத்தா போகும்வழியில் தற்செயலாக மோட்சத்தக்கு வரும்பாதையைக் கவனித்தார். "அதோ சூசைவருகிறானே!" கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தார். "ஆம் அவனேதான்," தூரத்தே ஒரு கூட்டம் பசாசுகள் ஆரவாரத்துடன் பின்தொடர்ந்து கொண்டிருந்தன. அவனைச் சுட்டிக்காட்டிச் சந்தோஷமாகத் தமக்குள் பேசிக் கொண்டன. தமக்கு ஒரு நல்ல இரை அன்று கிட்டப்போகிறது என்பதுதான் அதன் காரணம். அவனுடைய கைகளை ஆவலுடன் நோக்கினர். அவை வெறுமையாக இருந்தன. தச்சுமாலுள் விரைவாகப் புகுந்தார். மெதுவான குரலில் "சூசை இங்கே வா" என்று உள்ளே அழைத்தார். உள்ளே நுழைந்தசூசை, சூசைத்தாத்தாவைக்கண்டு திகைத்தப் போனான். வெளியே ஆரவாரம் கேட்டது. சூசைத்தாத்தா திரும்பினார். ஜன்னலூடாகப் பசாசுகள் எட்டிப்பார்த்தன. சூசை பயந்துபோனான். "சூசையப்பரே! என்னைக் கைவிடாதேயும்" என்று அவருக்குப் பின்னால் பதுங்கினான். "எங்களை ஏமாற்றாதேயும். இன்று மோட்சத்தில் மேதினம் கொண்டாடுகிறீர்கள். இவன் எங்களுக்குரியவன். இவனை எங்களிடம் விட்டால் நாமும் மேதினத்தை உமது போல் கொண்டாடுவோம் என்றது சாத்தான் நம். 1. இவன் தச்சுவேலையினால் களைத்துப்போய் ஒரு நாளும் ஞாயிற்றுக்கிழமைகளில் பூசைக்குப் போகவில்லை. அன்றுமுழுவதும் கடினவேலை செய்தானே என்றது சாத்தான் நம். 2. வேலை செய்த களைப்பைப்போக்க நன்றாகக் குடிப்பான். பின்னர் மனைவியை உதைப்பான். குழந்தைகள் இவன் கிட்டே போகக்கூட அஞ்சுமே" என்று கோள் சொல்லிற்று சாத்தான் நம். 3." "என்னவோ நான் செய்தது எல்லாம் பிழைதான். என்றாலும் உம்மில் பக்திவைத்து எனது தச்சுமாலில் உமது சொரூபத்தை வைத்துப் பூசித்து புதன்கிழமைகளில் ஓர் ஏழைக்கு சாப்பாடு கொடுத்தேன். அதைப் பார்த்தாவது என்மேலிரங்கும் என்றான் சூசை. "உஸ்," சப்தம்செய்யாதே!.....சாத்தான்களே; இது மோட்சவீடு.....இங்கு உங்களுக்கு நுழைய உத்தரவில்லை—போய்விடுகிறீர்களா! அல்லது மிக்கேலைக் கூப்பிடட்டுமா?" என்றார் சூசைத்தாத்தா. ஐயோ! வேண்டாம் வேண்டாம்! மிக்கேலின் வாளுக்கு நாம் ஈடு கொடுக்க முடியாது.....நாம் போய் விடுகிறோம்" என்று கூறிக்கொண்டே ஓட்டம் பிடித்தன நரக அலகைகள்.

திரும்பினார் சூசைத்தாத்தா. "பயப்படாதே சூசை, உனக்கு நான் ஆதரவளிப்பேன். சரி, உனக்கு தச்சுவேலை தெரியுமல்லவா? சிலவிளையாட்டுச் சாமான்கள் சரிசெய்தாக வேண்டுமே". "தாராளமாகச் செய்வேனே" என்றான் சூசை. பூமியிலிருக்கையில்கூட நான் பணம் வாங்காமல் உமக்காக சிறுவர்களுக்கு இலவசமாக விளையாட்டுப் பொருட்கள் சரி செய்து கொடுத்தேனே. ஆனால், என்னை நரகத்துக்கு மட்டும்....." "இல்லையில்லை. உனக்கு இங்கே இடமுண்டு. எனக்கு தச்சுமாலில் உதவியாள் தேவையென்று யேசுவிடம் கூறுவேன்" என்றார் சூசைத்தாத்தா. வெளியே சில மழலைமொழிகள் கேட்டன. கதவைத் திறந்துபார்த்தார். பாலர்களரிச்சம்மனசுகள் எல்மோ உட்பட தமது ஓடிந்த மரப்பொம்மைகளுடன் அங்கே நின்று கொண்டிருந்தன. அவைகளுடைய குறும்புக் கண்கள் எப்படியோ சூசைத்தாத்தா தச்சுமாலுக்குப்போய்க்கொண்டிருந்ததைக் கண்டுவிட்டிருந்தன. ஆகவே எப்படியோ பாலர்களரி ஆசிரியை பிறிஜிட் அம்மாளுக்கு "டிமிக்கி" கொடுத்துவிட்டு வந்துவிட்டன உடைந்த பொம்மைகள் சமேதராய்.

சூசை உட்கார்ந்தான் தச்சுமாலில். பரபரவென்று அவன் கைகள் பொம்மைகளைச் சரிசெய்து கொடுத்தன. சந்தோஷ ஆரவாரத்துடன் பாலர்களரியை நோக்கிச் சோன பொம்மைகளுடன் திரும்பிக் கொண்டிருந்தது பாலசம்மனசுக்குழு. "எல்மோ" இங்கேவா! இச்சீட்டைக் கொண்டு போய்த் தேவதாயிடம் கொடு" என்று ஒரு துண்டுக் காகிதத்தைக் கொடுத்தார். சூசைத்தாத்தா. "வழியில் பேதுருத் தாத்தாபிடித்துக் கொள்வாரே"என்று பயந்த எல்மோவுக்கு, "நான் அனுப்பினேன் என்று சொல்" என்றார் சூசைத்தாத்தா. எல்மோ ஓடோடிப்போய்ச் சீட்டைச் சேர்ப்பித்தது. அதைவாசித்த அன்னை அதை யேசுவிடம் கொண்டுபோய்க் கொடுக்கும்படி பணித்தாள். யேசு பாலன் தம் விளையாட்டை ஒருநிமிடம் நிறுத்தி ஓடிப்போய் மேசைமீதிருந்த மோட்சமுத்திரையை அதில் பதித்து பேதுருவானவரிடம் கொடுக்கும்படி சொன்னார். எல்மோ ஓட்டமும் நடையுமாக ஓடி பேதுருவானவரிடம் அதைச் சேர்ப்பித்துவிட்டுப் பாலர்களரிக்கு ஓடியது. பேதுருவானவர் மோட்ச அனுமதிச்சீட்டை தச்சுமாலிலிருந்த சூசையிடம் சேர்ப்பித்தார். சூசை சூசைத்தாத்தாவை வாயார வாழ்த்தினான்.

அன்று மாலை நாலுமணி. மோட்சநந்தவனத்தில் நடந்த தேனீர் உபசரணை விருந்தில் சூசைத் தாத்தாவின் பாதத்தடியில் அமர்ந்தவாறே உலகில் ஆங்காங்கே சூசைமுனிவரின் மகிமையைக் கொண்டாடும் முகமாக நடைபெறும் மேதினவிழாக்களைத் தெலிவிஷனில் கண்டுமகிழ்ந்தான் சூசை. எல்மோ அவனது மடியில் உட்கார்ந்து இன்னமும் "உலகத்து மக்களின் மன்றாட்டுக்கள் சரியான முறையில் அமையவில்லை"என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தது.

சுபம்.

(யாவும் கற்பனையே)

கத்தோலிக்க தொழிலாளர் திருநாள்

வைகாசி 1 ஆம் தேதி

தொழிலாளர்களின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின்

திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்

சுற்றுப்பிரகாரப் பாதை

திருச்சுரூபம் பாஷையூர், அர்ச். அந்தோனியார் கோவிலிலிருந்து புறப்பட்டு கடற்கரைவீதி — 3-ம் குறுக்குத்தெரு (பாஷையூர்) ஈச்சமோட்டை ஒழுங்கை — ஈச்சமோட்டைவீதி — பழைய பூங்காவீதி — குருசோவீதி — அச்சகவீதி — பிரதானவீதி — கண்டிவீதி — ஆஸ்பத்திரிவீதி — 3-ம் குறுக்குத்தெரு — 4-ம் குறுக்குத்தெரு — கடற்கரை வீதிவழியாகச் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானம் வந்து சேரும்.

குறிப்பு: பாதை ஓரங்கள் மாத்திரம் அலங்கரிக்கப்படல்வேண்டும்.

நிகழ்ச்சி நிரல்

காலை	7-00 மணிக்கு	திவ்விய பூசை (ஆசனக்கோவிலில்)
,,	8-30 ,,	சம்பாஷணைகள்
,,	10-30 ,,	திருமணித்தியாலம்
,,	11-45 ,,	செபமாலை
மாலை	4-00 ,,	சுற்றுப்பிரகார ஆரம்பம்
,,	7-00 ,,	திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்

சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் மகாவந். மேற்றிராணி ஆண்டவரால் தொழிலாளர்களின் ஆயுத உபகரணங்கள் ஆசீர்வதிக்கப்படும்.

திருநாளுக்கு ஆயத்தமாக நிகழ்மதி 28-ம், 29-ம், 30-ம் தேதிகளில் பிற்பகல் 6-30 மணிக்கு அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் (திரிதின) ஆராதனைநடந்தேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி பூசை வழிகாட்டி

வைகாசி மாதம் — 1964.

2	ச. அர்ச். அத்தனாசியார்	வெ.
3	ஞா. கர்த். உத். பின் 5-ம் ஞா:	,,
4	தி. அர்ச். மொனிக்கம்மாள்	,,
5	செ. அர்ச். 5-ம் பத்திநாதர்	,,
6	பு. கர். ஆரோ. ஆய. தினம்.	,,
7	வி. கர். ஆரோகணத் திரு.	,,
8	வெ. காலதினம்	,,
9	ச. அர்ச். இறகோரியார்	,,

சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந் திகதி

எங்கே போகிறீர்?

எங்கே போகிறீர்? "என்னை அனுப்பிய என் பிதாவிடம் திரும்பிப் போகிறேன்" இதுவே கிறிஸ்துநாதரின் பதில் இதைச் சற்றே ஆராய்வோம்.

கிறிஸ்துநாதரின் சகோதரராகிய நாங்களும் பிதாவிடமிருந்து வந்தவர்கள். அவரிடம் திரும்பிப் போகவேண்டியவர்கள்.

எங்கள் நிரந்தரமான இருப்பிடம் பிதாவின் வீடு. எங்கள் இலக்கு மோட்சம். இவ்வுலகில் நாங்கள் யாத்திரிகர்; வழிப்போக்கர்.

விரும்பினாலும் நாம் இவ்வுலகில் தரிக்கமுடியாது. பிரயாணிகள் என்றும் பிரயாணத்தின் முடிவை நோக்கி விரைந்து செல்ல வேண்டியவர்கள்.

சிலரின் பிரயாணம் நீளம். இன்னும் சிலரின் பிரயாணம் நடுத்தரம். மற்றும் சிலருக்குப் பிரயாணம் குறுகியது. சிலரின் பாதை இன்பம். மற்றோரின் பாதை துன்பம். ஆனால், எல்லாப் பிரயாணங்களுக்கும் எல்லாப் பாதைகளுக்கும் ஒரு முடிவு உண்டு.

எங்கே செல்கிறோம்? அம்முடிவை நோக்கியே விரைந்து போகிறோம். அம்முடிவு நம்மனக்கண்ணின் முன் தோன்றுகிறதிலும் பார்க்க நமக்குக்கூடிய அண்மையிலே நம்மைக்காத்து நிற்கிறது.

ஆயத்தமா?

இவ்வுலக சீவியத்தின் அந்தம் என்ன? மரணம். அதன்பின் தீர்வை தீர்வையின்பின் ஒன்றில் பிதாவின் வீடு; அன்றேல் பிசாசின் வீடு.

எங்கே போகிறோம்? பிதாவின் வீட்டை நோக்கியா? இவ்விடைகளுக்கு நாங்களே எங்களுக்குப் பதிலளிக்க வேண்டியவர்கள்.

காட்டின் ஊடே விரைந்தோடும் ஆறு; இருகரைகளிலும் பாரிய மரங்கள்; கிளைகளிலிருந்து கிளைகளுக்குப் பாய்ந்து குரங்குகள் கும்மாளம் போடுகின்றன. ஒரே குதூகலம்.

சடுதியாக ஒரு குரங்கு கால்தவறிக் கீழேயுள்ள ஆற்றில் விழுகிறது. மறைகிறது. மற்றக்குரங்குகளுக்கு ஒரே பயம்; ஒரே துக்கம். தலைகளைச் சொறிகின்றன; அமைதி நிலவுகிறது.

குரங்கு விழுந்து மறைந்து இன்னும் பத்துநிமிஷமாகவில்லை. ஆனால், கிளைகளின் மத்தியில் குரங்குகளுக்கு மறுபடியும் குதூகலமும் கும்மாளமும். இக்களியாட்டு மற்றக் குரங்கு விழுமட்டும் நடைபெறும்.

இவ்வுலக சீவியத்தின் முடிவை எங்களுக்கு நினைவூட்டுகிறது எங்கள் மத்தியிலே சம்பவிக்கும் மரணங்கள். அவ்வேளைகளில் எங்கள் சீவியத்துக்கும் ஒரு நாள் முடிவுவரும் என்ற உண்மையை உணருகிறோம். சிறிது காலத்துக்கு எமது ஆத்மீக அலுவல்களில் கூடிய அக்கறை எடுக்கிறோம். ஆனால், காலம் செல்லச்செல்ல?

எங்கே போகிறோம்? எங்கள் சீவியம் எம்மை எமது பிதாவின் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறதா?

ஒருவன் அடிக்கடி தன் மனச்சாட்சியைச் சோதித்துத் தன்னைத்தானே "எங்கே போகிறீர்?" என்று கேட்டு வருவானேயாகில் பாவத்திலிருந்து அவனைத் தப்புவிப்பதற்கு அது ஒரு சக்திவாய்ந்த வழியாகும்.

ஆம், எங்கே போகிறீர்?

கோவிலுக்குள் கதைப்பது ஆண்டவருக்கு அநாசாரம், அயலானுக்குப் பராக்கு, எமக்குப் பயனற்றது.

"என்வீடு செபத்தின் வீடு"

கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளின திருநாள்

ஆகமனகாலத்தில் நாம் துவங்கிய நமது ஆண்டவருடைய சீவியத்தின் பரம இரகசிய அநுசரிப்பு இன்றோடு முடிவடைகிறது. தேவவார்த்தையானது மாமிசமாகி அவர் நமது சுபாவத்தைத் தரித்து நாம் கிறிஸ்தவசீவியத்தை எப்படி நடத்தவேண்டுமென்று காட்டிய மேலான மூன்மாதிரிலகையைப் பார்த்தோம். அவருடைய போதனையைக் கேட்டோம். தமது பகிரங்க சீவியத்தினபோது (மூனறுவருட காலமாக) அவர் செய்த அற்புதங்களைக் கண்டோம். மனுக்குல இரட்சணியத்தை நிறைவேற்றிய அவரது கல்வாரிப்பலியின்போது சிலுவையண்டை நின்றோம். சாவின்மீதும், நரகத்தின்மீதும் வெற்றிகொண்டு அவர் உயிர்த்தெழுந்ததையும் பார்த்தோம். அதன்பின் தமது அப்போஸ்தலர்களுக்கு இடையிடையே காட்சியளித்து அவர்களை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்தித் திருச்சபையை ஸ்தாபித்து அதற்குத் தலைவராக அர்ச். இராயப்பரை நியமித்ததைப்பற்றியும் அறிந்தோம். இந்நனம் அவருடைய இரட்சணிய வேலை முடிந்தது. இனிமேல் அவர் தமது மோட்ச மகிமையை நித்திய மாய்ச் சுகிக்கப் பிதாவிடம் திரும்ப வேண்டியது நியாயமே. தம்முடைய தெய்வீகத்தில் நம்மைப் பங்காளிகளாக்கும் பொருட்டு அவர் பரலோகத்துக்கு உயர்த்தப்பட்டார்.

கிறிஸ்துநாதர் பரலோகத்திற்கு எழுந்தருளிய பரம இரகசியம் அவருடைய வெற்றியை மட்டுமின்றி, கடைசிமட்டும் விசுவாசத்திலும், தேவசிநேகத்திலும் நிலைத்திருந்தால் நாம் அடையப்போகும் மகிமையையும் குறிக்கின்ற பரம இரகசியமாகும்.

நாமும் மகிமையில் உயிர்த்தெழுவோம். மனுமகனால் மோட்சத்தில் வரவேற்கப்படுவோம். ஆகையால், இத்திருநாள் நமது மகிமையின் திருநாள் எனலாம். எப்படியெனில், தேவ வார்த்தையானவர் இவ்வுலகில் அவதாரஞ் செய்தகாலை தாம் எடுத்த மனித சுபாவத்தை அர்ச்சித்து, தெய்வீகப்படுத்தி, மோட்சத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்துள்ளார். நமது சுபாவத்தில் பங்கு எடுத்தவர் மகிமையடைந்ததால் நமது மனித சுபாவமும் உயர்த்தப்பட்டு அவருடைய தேவ சுபாவத்தில் பங்கு அடைந்திருக்கின்றது. நமது தலையாகிய கிறிஸ்து மகிமையடைந்ததினால் அவருடைய அங்கங்களாகிய நாமும் மகிமை அடைவோமென்ற நம்பிக்கை நமக்குண்டு. இந்த யோசனை இத்திருநாட்கால ஆராதனை முறையில் எங்கும் நிறைந்துள்ளது. பாஸ்குக்காலத்தில் நாம் கொண்டாடும் இரண்டாவது பெரிய திருநாள் இதுவே. இத்துடன் ஆண்டவருடைய உலக சீவியமும் முடிவடைகிறது. "இன்னும் கொஞ்சக்காலம். இதன்பின் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள். மீண்டும் கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக் காண்பீர்கள். ஏனெனறால், நான் பிதாவினிடம் போகிறேன்" என்று நமதாண்டவர் திருவுளம்பற்றியதும் தாம் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகப்போவதைப்பற்றியும் மீண்டும் பொதுத்தீர்வைக்கு உலகத்துக்கு வருவதைப்பற்றியுமே (அர்ச். அருளப்பர் அதி. 16 வச. 16—22).

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அப்போஸ்தலர்கள் அளவற்ற அச்சமும் துக்கமும் நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர். ஆகவே, அவர்களைத் தேற்றும் பொருட்டு, தான் பரலோகத்திற்குச் சென்றால்தான் திவ்விய இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் அவர்கள்மேல் வருவார். அவர்களை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்தி வேதபோதக அலுவலில் ஆர்வமாக உழைக்க ஊக்கப்பார் என்று வாக்குத்தத்தம பண்ணுகிறார்.

மேலும் நான் மோட்சத்திற்குச் சென்று உங்களுக்கு ஓர் இடத்தை ஆயத்தப்படுத்துவேன என்று இரண்டாம் வாக்குத்தத்தத்தையும் பண்ணினார். இவற்றை நாம் உற்று ஆலோசிப்பின் அவர் மோட்சத்துக்கு எழுந்தருளியது எவ்வளவு அத்தியாவசியம் என்று உணர முடியும். இஸ்பிரீத்து சாந்து சருவேசுரனையும் அவாது திருக்கொடைகளையும் நாங்கள் ஏராளமாகப் பெற்று மோட்சபேரின்ப பாக்கியத்தை நாமடையக் கிறிஸ்துநாதருடைய எழுந்தேற்றம் உதவியாயிருக்கிறதன்றோ. இதைக் குறித்துத்தான் அவரும், "நீங்களும் இப்போது துயரமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். ஆனால், மறுபடியும் உங்களைக் காண்பேன். அப்போது உங்கள் இருதயம் சந்தோஷிக்கும். மேலும், உங்கள் சந்தோஷத்தை உங்களிடத்தினின்று ஒருவனும் பறியான்" என்று வற்புறுத்துகிறார்.

ஆகவே, இத்திருநாள் இஸ்பிரீத்து சாந்து சருவேசுரனை நாம் வரவேற்கவும், தீர்வைநாளுக்கு நம்மை ஆயத்தப்படுத்தவும் வேண்டியவர்களாயிருக்கிறோம் என்று எடுத்து விளக்குகிறது.

அர்ச். சின்னப்பர் கூறிய அரிய புத்திமதிகளை இத்திருநாட் காலத்தில் ஞாபகத்திற்குக் கொண்டு வருவது அரும்பயனை அளிக்குமன்றோ.

"உங்கள் லௌகீக அவயவங்களைச் சாகடியுங்கள். அவையாவன: விபசாரம், அசுத்தம், காமம், தூர்இச்சை, ஒருவித விக்கிரக ஆராதனையாகிய பொருள் ஆசை, கோபம், எரிச்சல், வஞ்சகம், அவதூறு, வெட்கத்திற்குரிய பேச்சுக்கள் ஆகிய சகலத்தையும் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதேயுங்கள். இப்படிப் பழைய மனிதனையும் அவன் கிரியைகளையும் உங்களிடம் உரித்துவிட்டு தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாக அவரை அறியும் அறிவினால் புதுப்பிக்கப்படுகிற புதிய மனிதனை அணிந்து கொள்ளுங்கள்"(கொலோ. 3 : 1—15)

அன்றொருநாள் ஒலிவமலைமீதிருந்து ஒட்டோலகமாய் வெற்றி வீரராய், ஜெயசீலராய் நமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதர் மோட்சத்திற்கு எழுந்தருளிப்போகிறார். அவருடைய சீடர்கள் அவலுடன் அவரைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.

"கலிலேய மனிதரே! நீங்கள் வானத்தைப் பார்த்துக்கொண்டு ஆச்சரியப்பட்டு நிற்பானேன்? அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போனதை நீங்கள் கண்டதுபோலவே திரும்பவும் வருவார்" என்று இருசம்மனசுகள் கூறுகின்றன.

ஆகவே, அவரது இரண்டாவது வருகைக்காகக் காத்திருக்கும் கிறிஸ்தவர்களாகிய— அவர்களுடைய பக்தர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாச வேளை

நமது நிருபர் அமலன்

● றெஜீனுசேலி சிறைச்சாலை ● 6-வது சின்னப்பர் ● 23-ம் அருளப்பர்
● ஒல்லாந்த இளவரசி ● ஸ்பானிய முடியுரிமை ● அமெ. அதிபரின் புதல்வி
● வத்திக்கான் மண்டபம்

அம்மா: எங்கள் பாப்பரசரைப் பற்றி ஏதாவது சேதிஉண்டா?

பெரியண்ணு: அண்மையிலே பாப்பரசர் 6-வதுசின்னப்பர் உரோமையிலுள்ள றெஜீனுசேலி சிறைச்சாலைக்கு விஜயம்செய்தார்.

நிர்மலா: இந்தச் சிறைச்சாலைக்கு முதல்முதல் விஜயம்செய்த பாப்பு காலஞ்சென்ற அருளப்பதந்தைதானே.

ஆஞ்சலா: ஆமாம்; உங்களால் என்னைச் சந்திப்பதற்கு வரமுடியாதாகையால்யான் உங்களிடம் வருகிறேன் என அருளப்பதந்தை சிறைக்கைதிகளிடம் அப்போது கூறினார்.

பெரியண்ணு: பாப்பரசர் வருகைக்காகச் சிறைச்சாலையில் பெரியஆயத்தங்கள் எல்லாம் செய்தார்கள். பத்து நாட்களாகக் கைதிகள் ஞாயிறுபோதகம் படிப்பதில் ஈடுபட்டிருந்தார்களாம்.

அப்பா: கைதிகளுக்குத்தான் ஞானஅறிவு மிக அவசியமானது. அந்த அறிவு இல்லாதபடியால்தானே அக்கிரமக்காரர்களாக மாறுகின்றார்கள்.

பெரியண்ணு: பின்னர் ஒருநாட்காலை எட்டுமணிக்குச் சின்னப்பதந்தை சிறைச்சாலை சென்றார். கைதிகட்காக மறியற்கூடத்தில் நிவ்வியபூசை ஒப்புக்கொடுத்தார். நான்குகைதிகள் பூசைக்கு உதவிசெய்தனர். 600-க்கு மேற்பட்ட கைதிகள் திருவிருந்தருந்தினார்களாம்.

இயுஜீன்: மக்கள்சமூகத்தால் ஒதுக்கப்பட்டுக் கேவலமானவர்களாகக் கருதப்படுபவர்கள் சிறைக்கைதிகள். அவர்கட்கு அன்புகாட்டுவதன்மூலமே அவர்களை நல்வழிக்குத் திருப்பஇயலும்.

பெரியண்ணு: பூசையின்பின் தமது பாதுகாவலர்களை விட்டுவிட்டுத் தனியே அச்சமின்றிப் பாப்பரசர் அக்கைதிகளினிடையேசென்று உரையாடினார். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பலாத்காரம்முதலிய பயங்கரகுற்ற மிழைத்தவர்களிடம்கூட அவர்சென்று கைகளால் அவர்களை அணைத்து ஆதரவுடன் சம்பாஷித்தபோது பலகைதிகள் மனமுருகிக் கண்ணீர் சிந்தினார்களாம்.

அன்ரன்: பாப்பரசருக்குக் கைதிகள் அன்பளிப்புஏதும் கொடுக்கவில்லையோ?

கார்மெலா: எங்கே யார்போனாலும் அன்ரனுக்கு அன்பளிப்பில்தான் கண்.

பெரியண்ணு: தாங்கள் கத்தோலிக்கமதத்தில் உறுதியாக இருப்பதாக 1,110 சிறைக்கைதிகள் ஒருபத்திரத்தில் கையெழுத்திட்டு அழகானபேழையுள் வைத்துக் கொடுத்தனர். பாப்பரசர் முழந்தாளிட்டுச் செபிப்பதற்குதவியாகக் கைதிகளால் தயாரிக்கப்பட்ட அழகிய 'மூட்டு'ஒன்றும் கொடுக்கப்பட்டது.

அகஸ்ரீன்: இயுஜீன் சொன்னதுபோல இருளடைந்துகிடக்கும் குற்றவாளிகளின்மனதை அன்புவழிகளால் மட்டுமே மாற்றஇயலும். காலஞ்சென்ற அருளப்பபாப்பு இதேசிறைச்சாலைக்கு ஒருவிசைசென்றிருந்தபோது "நீங்களனைவரும் என் சகோதரர்கள்" என்றார். அப்போது பயங்கர பாதகங்களைக் கட்டிக்கொண்ட கொடியவன் ஒருவன் அவரிடம்வந்து, "தந்தையே நானுமா"?என அவநம்பிக்கையுடன் கேட்டான். அருளப்பதந்தையோ பதில்ஏதும் கூறாமல் அவனைத் தம்மார்புடன் அணைத்துக்கொண்டார். பாப்பரசரின் இச்செயலினால் அக்கொடியவன் மனம்மாறிப் பின்னர் நல்லவனாக நடந்துவருகின்றான்.

அப்பா: பாப்பரசர் என்கிறபோது மற்றொருசம்பவம் நினைவுக்குவருகிறது. நெதர்லாந்துதேச இளவரசி ஜூரின்தான் மணந்துகொள்ளவிருக்கும் கார்லோஸ் இளவரசருடன் அண்மையில் பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்தாராம்.

நிர்மலா: இந்த இளவரசியைப்பற்றித்தானே ஒல்லாந்து தேசத்தில் ஏதோ பெரும் பிரச்சினைகள் எல்லாம் அடிபடுகின்றன?

இயுஜீன்: ஆம், ஒல்லாந்த அரசகுடும்பம் புரொட்டஸ்தாந்த மதத்தைச் சேர்ந்தது. இராணிதொடக்கம் அரசகுடும்பத்தவர்கள் சகலருமே அம்மதத்தை உறுதியாய் அனுசரிப்பவர்கள். இப்படியிருக்கச் சிலமாதங்கட்கு முன்னால் ஜூரின்இளவரசி ஸ்பெயின் தேசத்தில் பூசைகண்டு நன்மைஅருந்தியதை ஒருபத்திரிகைநிருபர் கண்டுவிட்டார். ஐரோப்பாவின் பிரபல பத்திரிகைகள் படங்களுடன் இச்செய்தியைப் பிரசுரித்தன. பின்னர் ஒல்லாந்த அரசகுடும்பத்தினர் இளவரசி கத்தோலிக்கமதத்தில் இணைந்தது உண்மைதான்என ஒப்புக்கொண்டனர். எனினும், பல அரசியல்சிக்கல்கள் தலைதூக்கின.

அன்ரன்: என்ன சிக்கல்கள்?

இயுஜீன்: பட்டத்தரசியின் புதல்வியல்லவா? புரொட்டஸ்தாந்த மதத்தில்தான் அரசஉரிமையாளர்கள் ஒழுகவேண்டுமென்பது விதி. எனவே முடிக்குரிய இளவரசிகளில் ஒருவரான ஜூரின் கத்தோலிக்கமதத்தில் இணைந்தது, அரசியல் தலைவர்கட்கும், மதப்பெரியார்கட்கும் ஆத்திரத்தை ஊட்டியது.

அகஸ்ரீன்: அதனால்தான் இளவரசியை முடிக்குரிய உரிமை வரிசையிலிருந்து இராணி யூலியானா விலக்கிவிட்டாரே.

இயுஜீன்: இப்போது இன்னொரு சிக்கல். ஸ்பெயின்தேச அரசுரிமை தன்னுடையதென வாதாடும் இளவரசர் கார்லோஸ் அவர்களே இளவரசியின் காதலராவர். திருமணம் செய்தபின் தனதுகணவரின் முடிக்குரிய அரசியல் போராட்டத்தில் தானும்கலந்து கொள்ளப் போவதாக இளவரசி ஜூரின் அறிவித்துள்ளாள். ஒல்லாந்த அரசகுடும்பத்தவர்கள் தங்கள்நாட்டு அரசியலிலோ அல்லது அயல்நாட்டு அரசியலிலோ கலந்துகொள்ளக் கூடாதென்பது ஒல்லாந்த விதிகளில் ஒன்று.

அகஸ்ரீன்: திடமனதும் துணிவும் கொண்ட இளவரசி கத்தோலிக்க விதிமுறைகளுக்கிணங்க, ஒல்லாந்தின் தலைநகரிலே தங்கள் ஐரோப்பிய அரசகுடும்ப நண்பர்களனைவரும் முன்னிலையில் சிறப்பாகத் தன்விவாகத்தைநடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார். சிக்கல்நிரம்பிய இப்பிரச்சினை என்ன ஆகுமோ?

ஆஞ்சலா: அதுசரி, ஸ்பானிய இளவரசர் என்றெல்லாம் சொன்னீர்களே; முழுக் கத்தோலிக்கநாடான ஸ்பெயின் கடந்த பலவருடகாலமாகக் கத்தோலிக்க புரட்சிவாதியான ஜெனரல் பிராங்கோவினால் அல்லவா ஆளப்பட்டு வருகிறது?

பெரியண்ணு: ஸ்பானியாவில் நீண்டகாலமாக [illegible] இருந்துவந்தது. [illegible]

அரசர் 1833-ல் இறந்தார். அவருக்குப் புதல்வர்களில்லை. விதிப்படி ஆண்மகவுக்கே அரசுரிமை உண்டு. எனவே, அரசகுடும்பத்தில் பலசிலுசிலுப்புகள் தோன்றின. ஆயினும், சட்டத்தில் திருத்தம்செய்து அவ்வரசரின் புதல்வியான 2-வது இசபெல்லா மரியாவைச் சிம்மாசனத் தேற்றினர். இது முறையற்றதென அரசனின் இளையசகோதரனை தொன்கார்லோஸ் எதிர்ப்புக்காட்டினார். முறைப்படி அரசுரிமை தமக்கே உரியதெனப் புரட்சி செய்தார். புரட்சி தோல்வியுற்றது. அவரின் சந்ததியார் இந்தஉரிமையைவற்புறுத்திக் கொண்டே யிருக்கிறார்கள். அவ்வழியேவந்த இளவரசரே இப்போது ஜூரினைத் திருமணம் செய்துகொள்ளப்போகும் கார்லோஸ் என்பவர்.

கார்மெலா: நல்ல பிரச்சினைதான்.

அகஸ்ரீன்: விஷயம் அவ்வளவோடு நீரவில்லை. அரசி இசபெல்லா மரியாவின்வழியில் அரசுசெலுத்திய கடைசி அரசர் 13-வது அல்பன்சோ ஆவர். இவரின் பின்னர்தான் ஜெனரல் பிராங்கோவின்புரட்சி கடைபெற்றது. இந்த அல்பன்சோவின் புதல்வரான இளவரசர் தொன்யுவான் ஸ்பானியஅரசுரிமை தன்னுடையதென வாதாடுகிறார். ஜெனரல் பிராங்கோவயதில் முதிர்ச்சி அடைவதால் அவரின்பின்னால் ஸ்பெயின் மீண்டும் முடியரசாகுமெனவும், அப்போது இவ்விரு இளவரசர்கட்கு மிடையே தகராறு உச்சநிலையடையலாமெனவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

நிர்மலா: கத்தோலிக்கர்களான இந்த இளவரசர்கள் தங்களிடையே ஒற்றுமை காணவேண்டும். அதுதான் அவர்கட்கு நல்லது. கத்தோலிக்கமதத்துக்கும் அதனால் பெருமை.

பெரியண்ணு: ஒல்லாந்த, ஸ்பானிய இளவரசுகளின் திருமணச் சிக்கல்களையும், பிரச்சினைகளையும் எண்ணும்போது அமெரிக்கா எவ்வளவோ மேல் என்று தோன்றுகிறது.

அன்ரன்: ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

பெரியண்ணு: ஜனாதிபதி லின்டன் யோன்சனின் புதல்வி ஒரு கத்தோலிக்க இளைஞரைக் காதலிக்கிறாள். ஜனாதிபதியின் புதல்வி எப்பிஸ் கோப்பலிப மதத்தவள். லின்டா பேட் என்பது அவள் நாமம். 20வயது நிரம்பிய வள். இவளது காதலர் கப்பற்படையில் கடமையாற்றும் ஒரு கத்தோலிக்க இளைஞர். பெயர் பேர்ணட் ரொசான் பேக். இந்தத் திருமணத்துக்கு ஜனாதிபதி தம்பதிகள் மகிழ்ச்சியோடு உத்தரவளித்துள்ளனர். ஒல்லாந்த அரசகுடும்பத்தவர்போல் அரசியல், பதவி முதலியவற்றை அவர்கள் சிந்தித்தும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

ளாகிய— நாமும்— எங்கள் கண்களை மோட்சபக்கமாகத் திருப்பி அவருடைய இரண்டாவது வருகைக்கு உகந்த வாழ்வை வாழ— வாழ்ந்து மோட்ச பேரின்பத்தை அடைய— முயற்சிப்போமாக.

—பி. ச.

தொழிலாளரின் பாதுகாவலராம்
அர்ச். சூசையப்பர் பேரில்
பரிசுத்தபிதா இயற்றிய செபம்

மகிமை நிறைந்த பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! நசரேத்தின் தாழ்மையும், நேர்மையுமுள்ள தொழிலாளரே! ஊக்கமுள்ள முயற்சியாலும், யேசுவுடனும் மரியாயுடனும் கொண்ட ஆச்சரியமான ஐக்கியத்தாலும் பூரணமாக்கப்பட்ட வாழ்க்கையின் மாதிரிகையைச் சகல கிறிஸ்தவர்களுக்கும் — சிறப்பாக எமக்கும் தந்தருளியவரே! எமது அனுதின உழைப்பில் உதவியளித்துக் கத்தோலிக்க தொழிலாளராகியநாமும் தேவனைத் தோத்திரிப்பதும், எம்மை அர்ச்சிப்பதும், நாம் வாழும் சமூகத்துக்குப் பயன்படுவதுமாகிய எமது முயற்சிகளின் உச்சித லட்சியங்களை நாம் அடையச் செய்தருளும்:

எமது அதிபட்சம் நிறைந்த பாதுகாவலரே! தாழ்மை நிறைந்ததும், களங்கமற்றதுமான இருதயத்தையும், எங்கள் தொழிலில் பற்றுதலையும், உடன் தொழிலாளர் மட்டில் நேசபான்மையையும், பூலோக வாழ்க்கையின் தவிர்க்க முடியாத துன்பங்களில் தேவசித்தத்துக்குப் பணிவையும், அவைகளைச்சகிப்பதில் சந்தோஷத்தையும், சமூகத்திற்கு நாம் செய்யவேண்டிய சிறப்பான தொண்டைப் பற்றிய உணர்வையும், எமது கடமைப்பாட்டின் பொறுப்பையும், கட்டுப்பாட்டுக்கு அமைந்த போக்கையும், செபப் போக்கையும், எசமான்கள் மட்டில் அமைச்சல் மரியாதையையும், உடன் தொழிலாளர் மட்டில் சகோதர பான்மையையும், எம்மைச் சார்ந்தோர் மட்டில் அன்பையும், தயைதாட்சணியத்தையும் எமக்கு ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுத்தந்தருளும்.

எமது தொழிலின் பலனை நேர்மையாய் அனுபவிக்கும்படியாகவும் அனுகூலமாயிருக்கும் சுபீட்ச காலத்தில் எம்முடன் இருந்தருளும். வானமே இடிந்து எம்மை அமுக்குவதுபோலவும், நாம் கையாளும் தொழிற்கருவிகளுங்கூட எம்மை எதிர்ப்பதுபோலவும் துன்பம் வந்துற்ற காலத்திலே எமக்கு ஆதரவாயிரும்.

உம்முடைய எளிய பட்டறையின் ஒரு மூலையில் அமைதியாய் அமர்ந்து நூல்நூற்றுப் புன்னகை தும்பிய முகத்தினளாயிருந்த மிகவும் இனிய உமது பத்தினியும், எங்கள் திருத்தாயாருமான மரியன்னையை உமது மாதிரிகைப்படி நாம் என்றும் கண்டுபாவிக்க அருள்புரிந்தருளும். உம்மோடுகூடத் தச்சப்பட்டறையில் உழைத்த யேசுவிடமிருந்து எமது பார்வை ●அகலாதிருக்கச் செய்தருளும். இவ்விதமாய்ச் சதாகாலமும் எம்மை மோட்சத்தில் காத்திருக்கும் நித்திய பேரானந்த வாழ்வுக்கு அச்சாரமாகப் பூலோகத்தில் நாம் சாந்தியும் பரிசுத்தமுமான வாழ்க்கை நடத்திவரச் செய்தருளும்.

ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதர்கள் பூசித்த 5 திருக்காயங்கள்

(எஸ். எம். ஜே.)

யேசுநாதசுவாமியின் ஐந்துதிருக்காயங்களின்பக்தி திருச்சபையின் பழைய பக்திகளில் ஒன்று. மனிதர்களுக்கு அந்த ஐந்து திருக்காயங்களும் அருமையானவைகளாய் இருந்தன. அவைபற்றி அவர்கள் செப்பிச் சென்ற அரிய மொழிகள் உருக்கம் நிறைந்தவை; உள்ளத்தைத் தொகுப்பவை; ஆறுதலும், அபயமும் அளிப்பவை.

புனிதர் காட்டும் பாதை

நான்காம் நூற்றாண்டின் இறுதியில் புனிதர் அகுஸ்தினர், "அமைதியிழந்த வேளையில் அபயமளிப்பதும், சஞ்சலமற்ற வேளைகளில் ஆறுதலளிப்பதும், சோதனை வேளைகளில் தஞ்சமளிப்பதும் யேசுவின் திருக்காயங்கள் தாம்" என்கிறார்.

"வல்லமை மிகுந்த திருக்காயங்களே! எனது இதயக் கண்கள் பொழுதுவிடிந்து, பொழுது மறையும் வரையும் மதாரம் நிறைந்த ஐந்துதிருக்காயங்களையும் ஏறெடுத்த வண்ணமே இருக்கும். இரவுப்பொழுதில் கண்ணிலிருந்து தூக்கம் கலையும பொழுதெல்லாம் உமது காயங்களையே பார்த்தவண்ணமே இருப்பேன்" என்று புனித பொனவெந்தர் ஒலமிட்டுச் சொல்லுகிறார்.

"ஓ யேசுவே! உமது திரு இருதயத்தில் இடம் தருவதற்காகவன்றே அது குத்தித்திறக்கப்பட்டிருக்கின்றது. உமது இருதயத்தின் அன்பை வெளிப்படுத்தவன்றே உமதுகாயத்தை இன்னமும் காண்பித்துக் கொண்டிருக்கிறீர்" என்று புனித பேர்னட் கூறுகிறார்.

எங்கள் அன்றாட சிலுவத்தில் ஐந்து திருக்காயங்களின் பக்தி நிச்சயம் இடம் பெறவேண்டும்.

தேவதாயின் மாதிரிகை

ஐந்துதிருக்காயங்களின் பக்தியில் தேவதாயார் நமக்கு உத்தம மாதிரிகையும் வழிகாட்டியுமாக இருக்கிறார். சொல்லில் விபரிக்க முடியாத மென்மையும், கனிவும், உருக்கமும் நிறைந்தவள் அவள். அவளுடைய பக்தி சிலுவையடியில் ஆரம்பமாயிற்று. கண்முன்னே வைத்து அந்த ஐந்துதிருக்காயங்களையும் மிகவும் உருக்கமாய்த் தியானித்தாள். தனது ஏகமைந்தனை, அருமை மைந்தனைக் கண்முன்வைத்து வழிபட்டு நின்றாள். கல்வாரிமலையிலே சோகமே உருவெடுத்து நின்றாள் கன்னித்தாய். அவள் அனுபவித்த வியாகுலம இந்த உலகில் எந்த அன்னையும் அனுபவித்திருக்கவுமில்லை, அனுபவிக்கவும் முடியாது. சுற்றியலால் அடிக்கும் சப்தம் அவள் காதுகளிற்பட்டன. கூரிய ஆணிகள் கொடூரமாய் யேசுவின் கைகளையும், கால்களையும் துளைத்துச் சென்றதையும் கண்முன்னாலே கண்டாள். விபரிக்க முடியாத, வாக்கிலே அடங்காத வேதனைகள் நிரம்பிய அந்த மூன்றுமணிநேரமும் திருத்தாயார் சிலுவையடியில் நின்றாள். வேதனைக்கடலில் அவள் மூழ்கியிருந்தபோதும் எவ்வளவோ உறுதியுடனும், பலத்துடனும் அவ்வேதனைகளையும், வியாகுலங்களையும் இருதயத்திலே சுமந்தாள். அவருடைய கடைசி ஏழு வாக்கியங்களையும் கேட்டாள். அவர் உயிர்நீத்தபின்பு பல அதிசயங்கள் நடந்தன. உலகமே இருளில் மூழ்கியிருந்தது. பின்பு ஒளிபிறந்தது. ஏழைகளுக்கும், பிணியாளருக்கும் ஆசியளித்து அபயமருளிய அன்புக்கரங்கள் எண்ணிறந்த அற்புதங்களைச் செய்த அருட்கரங்கள், சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டுத் தொங்குவதை அவள் கண்டாள். குழந்தைபிலும், மழலையிலும், வாலிபத்திலும் கண்ட கரங்கள் இப்போது இங்ஙிலையில் இருப்பதை அவள் மறக்கமுடியாது. நொந்து வருந்திய உள்ளத்தோடு சிலுவையை நோக்கி நின்றாள். பலஸ்தீனு எங்கும் கருணைபொழிந்து அலைந்து திரிந்த திருப்பாதங்கள் சிலுவையில் அறையப்பட்டிருந்தது. பாவிகளைத் தேடி, மன்னிப்பு வழங்கிய பாதங்கள், அவருடைய அன்பை, அணைகடந்த நேசத்தை எடுத்தியம்பிக்கொண்டேயிருந்தன. இவற்றை அந்த அன்னை சிந்தித்து, தியானித்துக்கொண்டேயிருந்தாள். அவர் மரித்தபின் லொஞ்ஜினஸ் திருவிலாவைக் குத்தித் திறந்தபோது வியாகுலத்தாயின் வேதனை எவ்வளவு அதிகரித்திருக்கும். அவளது இருதயத்திலேயே ஈட்டியால் குத்தியதுபோலிருந்திருக்குமன்றே! "வியாகுல வாள் உமது இருதயத்தை ஊடுருவும்" என்று சீமோன் வசனித்தது இங்கு நிறைவேறிற்று.

யேசுவின் திருச்சரீரம் சிலுவையில் நின்றும் இறக்கப்பட்டு அவர் திருத்தாயார் மடியில் வளர்த்தப்பட்டது. அப்பொழுது, கன்னித்தாய் அந்த ஐந்துகாயங்களையும் வணங்கினாள். மீண்டும், மீண்டும் அவரது வேதனைகளை, உபாதைகளை எல்லாம் அவள் கண்முன்கண்டு கலங்கிப் பரதவித்து வருந்தினாள். மூன்றுமணி நேரமும் அவர் அனுபவித்த சகலமும் அவள் மனத்திரையில் வந்து உள்ளத்தை உறுத்திக்கொண்டேயிருந்தன. உலக எண்ணங்கள், உலக அலுவல்கள், லௌகீக விருப்புகள் ஒன்றும் அவளிடத்தில் இருக்கவில்லை. ஆம், அந்தத் தேவகுமாரன் குழந்தையாகப் பிறந்தபோது தனது கரங்களில் ஏந்திய அதே குமாரன் இன்று உருமாறி, உருக்குலைந்த நிலையில், உயிர்பிரிந்த உடலைக் கரங்களில் தாங்கியிருந்தாள் அவள்.

வியாகுலத்தாய் எவ்வளவு சிரவணக்கத்தையும் காட்டி, தனது கரங்களால் தொட்டுப் பார்த்தாள். அவள் ஒருவருக்குத்தான் குத்தித்திறக்கப்பட்ட யேசுவின் திருஇருதயத்தின் அளப்பரிய அன்பை— மனுக்குலத்தின்மீது அவர்கொண்ட அலாதியான அன்பை அறிய முடிந்திருந்தது. "கடவுள் உலகத்தை எவ்வளவு அதிகமாய் நேசித்தார் என்றால், தமது ஏககுமாரனையே உலகுக்கு அனுப்பினார்" என்ற இந்த உயர்ந்த எண்ணம் அவள் இருதயத்தில் இருந்துகொண்டேயிருந்தது.

மனிதனின் நன்றிகெட்டதனத்துக்குப் பரிகாரமாக இத்தனை வேதனைகளையும் அனுபவித்தார் என்பதையும், மனிதனுடைய பாவமன்னிப்புக்காகவே தேவசுதன் இவற்றை ஏற்றுக்கொண்டார் என்பதையும் தேவஅன்னை இந்த ஐந்துகாயங்களின் வழியாக உணர்ந்து கொண்டாள்.

திருச்சபை காட்டும்வழி

திருக்காயங்களை ஆராதித்தவர்களுள் முதன்மையானவள் தேவதாய். அவளுடைய மாதிரிகையை அர்ச்சிஷ்டர்கள் கண்டுபாவித்துள்ளனர். "எனது சகல கஷ்டங்களிலும் யேசுவின் திருக்காயங்களைப் போல், திடமளிப்பவை ஒன்றுமே இல்லை. நான் நன்றாக— கலக்கமின்றி நித்திரை செய்வதும், புத்துயிரும், புதுத்தெம்பும் பெறுவதும் இக்காயங்களினால்தான்" என்று புனித அகுஸ்தினர் வசனிக்கிறார். புனித இன்னசியார், "ஆண்டவரே, உமது காயங்களுள் என்னை மறைத்தருளும், நான் உம்மைவிட்டு அகலாதிருக்கச் செய்தருளும்" என்று மன்றாடும்படி தூண்டுகிறார். இவ்வார்த்தைகள் எவ்வளவு அர்த்தம் பொதிந்தனவையாய் விளங்குகின்றன.

இந்த ஐந்துகாயங்களும் யேசுவிடம் நாம் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதை நமக்குப் படிப்பிக்கின்றன. எங்கள் இரட்சணியம் சிலுவையில் அறையப்பட்ட திவ்விய அன்பரின் கரங்களில்தான் தங்கியுள்ளன. நித்திய நேசரான யேசுவின் நிகரற்ற அன்பின் வெளிப்படுத்தல்கள்தாம அவை. எங்கள் தண்பங்களை ஏற்றுப் பொறுமையோடு சகிக்க வேண்டிய மனத்திடனை அவை அளிக்கின்றன. "மிகவும் உயர்ந்த காரியங்களை, மோட்சத்தைப்பற்றிய சிந்தனைகளை மனதில் எழுப்பமுடியாதுவிட்டால், அவற்றைத் தியானிக்க முடியாதபோலல், யேசுவின் திருப்பாடுகளைத் தியானியுங்கள்; உங்கள் புலன்களை, மனதகளை அவற்றின் பக்கம் திருப்புங்கள்; யேசுவின் திருக்காயங்களை வசிப்பிடமாய் மாற்றுங்கள். யேசுவின் திருக்காயங்களிடம் ஓடிச்சென்றால், அவை சாந்தியும், சமாதானமும் அளிக்கும். சஞ்சலம் நீக்கி— சபலம் போக்கி நல்வழிகாட்டும்" என்று (Imitation of Christ II, 1—4) எனும் நூல் கூறுகின்றது. நாமும் எமது சஞ்சலம் நீங்கவும், துயர் அகலவும், யேசுவின் திருக்காயங்களை அடிக்கடி தியானிப்போமாக.

கித்தேரி அம்மாள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் அன்பர் வேண்டுகோட்கிரங்கிக் கித்தேரி ஆற்றிய புதுமைகள் எண்ணிறந்தனவாம்.

இத்தகைய நற்பெருஞ் செல்வி தமிழ்நாடு செய்த தவப்பயனை, காவிரியின் வடகரையில் கோயில்கொள்ள இசைந்தாள். அடைக்கலமாதாவின் அருட்காவலில் அமைந்த திருக்காவலூர்க் கோவில், கித்தேரியின் அருளை இன்றும் விளக்குகின்றது.

"அருட்காவல் நீங்கா [டைத்
அடைக்கலத்தாய்க் கோயிலி
திருக்காவ லூர்வணங்கும்
செல்வமிகும் கித்தேரி
ஆளுமிட மாகவிங்கண்
அன்புமிக உள்ளிரங்கி
நாளுமெனி செய்புதுமை
காட்டிலறி யாருமுண்டோ"

என்று வீரமாமுனிவர் காவலூர்க் கோயிலில் நின்று காத்தருளும் கித்தேரியின் கருணையை வியந்து புகழ்ந்தார். மகப்பேறின்றி மனம்வருந்திய மாதர் கித்தேரியின் நற்பூள்தொழுது அறிவறிந்த மக்களைப் பெற்று வசைதீர்த்து வழுத்தினர்.

"மண்ணரசு செல்வமெலாம்
வாரிநுரை ஒத்ததென
விண்ணரசு சென்றடைய
விட்டனைத்தும் நீக்கினீர
இவ்வுலகின் வாழ்வனைத்தும்
எண்ணுமல் நாம்அறஞ்சேர்
அவ்வுலகின் வாழ்வடைய
ஆய்ந்தொழுகச் செய்வாயே"

"வான்விரும்பித் தாய்தந்தை
மற்றினமும் பாராமல்
கான்விரும்பி நற்றவத்தைக்
காத்தமலை அண்டினீர
இனம்வேண்டி ஆண்டவரை
ஈங்கிழவா தோர்நிலையாய்த்
தினம்வேண்டிக் கொண்டிருக்கத்
திண்ணுறுதி தந்தருள்வீ"

என்று வீரமாமுனிவர் திருக்காவலூரில் கோவில் கொண்டருளிய கித்தேரியம்மையை வேண்டித் துதிக்கின்றார்.

இத்துடன் கற்பலங்காரியின் இன்பக்காதை இனிதே முற்றிற்று.

H. T. T.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் தயவினாலும், அர்ச். யூதாததேயுவின் மன்றாட்டாலும் எனது தம்பிக்குவந்த வருத்தம் சுகமானது. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். காலதாமதத்துக்கு மன்னிப்புக் கேட்கிறேன். இன்னும் நற்சுகம் கிடைக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஓர் அடியாள்.

ஊறணி.

புத்தக மதிப்புரை

விவேகப்பரீட்சை அப்பியாசங்கள்

General Intelligence Exercises

ஆக்கியோன்—பேராசிரியர்
பி. சவிரிமுத்து, எம். ஏ.
பட்டதாரிப் பரீ. (இலண்டன்)
வெளியிட்டோர்—
எம். டி. குணசேனா அண்ட்கம்பெனி
லிமிட்டெட், கொழும்பு.

மாணவர்களின் விவேகத்தைப் பரீட்சித்து அறிவதற்கும், அவர்களில் காணப்படும் தனித்தனி விவேகவித்தியாசங்களைத் தெரிந்துகொள்வதற்குமாக ஆசிரியர்களுக்கு ஓர்உறுதுணையான வழிதுறையாக இந்நூல் வெளிவந்திருப்பது சாலவும் மகிழ்ச்சிதருவதாகும். பல பழைய நூல்களிலும், வித்தியாபகுதிப் பரீட்சைகளிலும் தோன்றியனவாய் இந்நூலின் இருபத்தைந்து அப்பியாசங்களிலும் அடங்கியுள்ள 1,135வினாக்களையும் ஆராய்வாகப் படிக்குமிடத்து, மிகப்பரந்த விவேகிகள்உலகில் தோன்றிய அறிஞர்கள் பலரும் தமது ஆராய்ச்சித்துறையிலும், அனுபவமுறையிலும் கண்டறிந்து அதிவிவேகத்துடன் இவைகளை எழுதியுள்ளார்கள் என்பது இனிதே புலனாகும். அவர்களின் விவேகத்திற் பிறந்த வினாக்களை ஒருங்குசேர்த்து மதிநுட்பமாக ஒழுங்கு முறைப்படுத்தித் தமிழாசிரிய உலகுக்கு அரிய தொருநூலாகத் தந்திருக்கும் ஆக்கியோன் அவர்களின் விவேகசாதுரியம் பாராட்டத்தக்கதே. இந்த விவேகப் பரீட்சை வினாக்களிலே ஒப்புநோக்கும் சொற்கள், சோட்டுச்சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், "இதற்கு இது" போன்றமுறையில் தொடர்புச் சொற்கள், தொடர்பற்ற சொற்கள், பொருத்தமானசொற்கள், பொருந்தாதசொற்கள், பொருத்தமான விடைகள், பொருந்தாத விடைகள், வசனங்களை நிரப்பும்சொற்கள் ஆகியன வகுத்துத் தொகுத்துக் கவர்ச்சிகரமாகத் தரப்பட்டிருப்பதாலே விளையாட்டு விளையாட்டாய் மாணவர்களின் விவேகத்தைப்பரீட்சித்து, அவர்களின் தனித்தனி விவேகவித்தியாசங்களைக் கண்டறிந்து வேலையைக் கொண்டோடுவது மிகஇலகுவாகு மென்பதில் ஐயமில்லை. ஆகவே, ஆக்கியோனின் அருஞ்சேவையைப் பாராட்டி ஆசிரியஉலகம் இந்நூலை மனமுவந்து வரவேற்றுப் பெரும் பயனெய்துமென நம்புகிறோம்.

மெளனமே மங்கையருக்கு
மேன்மையான மணி ஆரம்.
ஆனால், அணிந்தால் அல்லவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மன்றாட்டை அவர் மறக்கவில்லை

அன்று அர்ச். சூசையப்பர் நவநாள் ஆரம்பதினம். வழக்கம்போல ஏழைகளின் சிறிய கன்னியாஸ்திரிமாரின் கண்காணிப்பிலிருக்கும் அர்ச். சூசையப்பர் அனுதைமடத்தில் பூசையை முடித்துவிட்டு எனதுமனைக்கு வந்து சேர்ந்தேன். வண்டியைவிட்டு இறங்கியதும் எனக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. காரணம். வெளியில் போடப்பட்டிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்த ஓர் உருவம் தான். அது என் பழைய கலாசாலைத் தோழன் செல்வராஜைப் போல் இருந்தது. நான்காண்பது கனவா அன்றேல்நனவாஎன்ற ஐயம் எழுந்தது. மீண்டும் ஒருதரம் பார்த்தேன். எனதுஐயம் நீங்குவதற்குள் அவ்வுருவமே என்னிடம் ஓடிவந்து, 'சர்வேசுரனுக்குத் தோத்திரம் சுவாமி'என்று என்முன் முழங்காவிலிருந்து என்கரங்கள் இரண்டையும் பற்றி முத்தமிட்டது. ஆனால் நன்றாகக் கவனித்தேன். ஆம், என்பழைய கலாசாலைநண்பன் செல்வராஜ்தான்.

இருவரும் கல்லூரிப் படிப்பை முடித்துப் பத்துவருடங்கள் ஆகின்றன. அதற்கிடையில் ஒருவரை ஒருவர் சந்திக்கவேயில்லை. படிப்பு முடிந்ததும் செல்வராஜ் மலேயா சென்றான். பங்குனிமாதம் 6-ந்திகதி தான் திரும்ப இந்தியா வந்தான். வந்தவன் தனது பழைய சிநேகிதனை மறவாது எப்படியோ விலாசத்தை அறிந்துகொண்டு பார்க்கவந்துவிட்டான். நெடுநாளாகப் பிரிந்திருந்த நண்பர்கள் திரும்பவும் கூடுவதென்றால் கேட்கவா வேண்டும்? எங்கள் கலாசாலை நாட்களைப்பற்றிய பழங்கதைகளைப் பேசினோம். சிரித்தோம். ஆனந்தக்கண்ணீர் உகுத்தோம். அதன்மேல் அன்றுஎன்னோடு விருந்து அருந்தும்படி செல்வராஜைக் கேட்டுக் கொண்டேன். அவனும் இசைந்தான். மாலை தேநீர் அருந்தியபின் அவ்வூரிலுள்ள முக்கிய இடங்களுக்கு அவனை இட்டுச் சென்றேன். பார்க்கவேண்டியஇடங்களைப் பார்த்துவிட்டுக் கடைசியாக ஏழைகளின் சிறிய கன்னியாஸ்திரிமார் நடத்தும் அனாதைமடத்துக்குச் சென்றோம்.

மணி அடித்தேன். தாயார் வந்தார். செல்வராஜை அவருக்கு அறிமுகம்செய்து வைத்தேன். பின்னர் மடத்தைச்சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். முதலில் செல்வராஜைக் கோவிலுக்குக் கூட்டிச்சென்றேன். அங்கு மேலும்கீழும், அப்பக்கமும், இப்பக்கமும் பார்த்துக்கொண்டே வந்தான் செல்வராஜ். நடுப்பீடத்தண்டை வந்ததும், அர்ச். சூசையப்பர் சுரூபத்தைச் சுட்டிக்காட்டி, ''அது என்ன?'' என்றுகேட்டான்.

''ஏன், தெரியவில்லையா? அர்ச். சூசையப்பர் என்றேன். ''அதுதெரிகிறது; ஆனால், அவர்கழுத்தில் ஏதோ தொங்குகிறதே; அதுஎன்ன?''என்று கேட்டான் செல்வராஜ். நானும் தான் அர்ச். சூசையப்பர் சுரூபத்தை எத்தனையோமுறை பார்த்திருக்கிறேன்.. ஆனால்அதில் நூதனமாக ஒன்று மில்லையேயென்று எண்ணிக் கொண்டு சுரூபத்தை உற்றுப்பார்த்தேன். ஆம், அதன்கழுத்தில் ஏதோ தொங்கிக்கொண்டுதான் இருந்தது. ஆனால், அது என்னவென்று சரியாகத் தெரியவில்லை.

''ஆமாம், ஏதோ தொங்கிக் கொண்டுதான் இருக்கிறது. என்னவென்று தெரியவில்லை. தாயார்வரட்டும் கேட்போம்''என்றுகூறிச் செல்வராஜுக்குக் கோவிலைச் சுற்றிக் காட்டிவிட்டு அனுதைமடத்தின் ஏனைய இடங்களைப்பார்க்கக் கூட்டிச் சென்றேன். வழியில் தாயார் வந்தார். எங்களை உபசரிக்குமாறு சம்பாஷணைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றதும், சூசையப்பர் கழுத்தில் தொங்குவது என்னவென்று விசாரித்தேன்.

தாயார் என்கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆகையால் அவர் சற்றே திகைத்துவிட்டார். பின் ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு, '' அது வேறொன்றுமில்லை சுவாமி; அது ஒரு பூசைப்பாத்திரத்தின் மாதிரி; தகரத்தில் செய்தது. நமது கோவிலில் நல்ல ஒரு பூசைப் பாத்திரம் இல்லாதகுறை பெருங்குறையென்பது தங்களுக்கும் தெரியுமே. உங்களுக்குப் பூசைக்கு வைக்கிறீரே, அந்தப் பழையபாத்திரம் ஒன்றுதான் இருக்கிறது. ஆகையால் எப்படியாவது புதுப்பாத்திரம் ஒன்று வாங்கவேண்டுமென்று நெடுநாளாக என்உள்ளத்தில் ஓர் ஆவல் குடிகொண்டிருந்தது. ஆனால், பணத்திற்கு எங்கே போவதென்று தெரியவில்லை. அர்ச். சூசையப்பரைப் பிடித்தால் எப்படியும் காரியம் சித்தியாகிவிடும் என நம்பிக்கையுடன், மடத்துப் பிள்ளைகளையெல்லாம் இக்கருத்துக்காக மன்றாடிக் கொள்ளும்படி சொல்லியிருந்தேன். இன்றுடன் இரண்டுவாரமாகிறது, இந்தக்கருத்துக்காக நாங்கள்மன்றாடத்தொடங்கி; ஆனால், எங்கள் மன்றாட்டு இன்னும் கேட்கப்படவில்லை. ஒருவேளை அர்ச். சூசையப்பர் தமக்குவரும் ஆயிரக்கணக்கான வேண்டுதல்களில் இதை மறந்துபோயிருப்பாரென்று நினைத்து, எங்கள்பிள்ளைகள் தகரத்தில் ஒருபூசைப்பாத்திரம்மாதிரிச் செய்து அவரதுகழுத்தில் அதை தொங்கவிட்டிருக்கிறார்கள். இது எங்கள் வேண்டுகோளைச் சதா அவருக்கு ஞாபகமூட்டிக் கொண்டிருக்குமாம்''... என்றுகூறித் தாயார்சிரித்தார். கூடவே நானும், என்நண்பனும் அவ்விஷமச்சிறுமியரின் செயலைநினைத்து விழுந்துவிழுந்து சிரித்தோம். பின்னர் உபசரணை முடிந்து எழுந்தோம். பார்க்கவேண்டிய மற்ற இடங்களையும் பார்த்துவிட்டுத் திரும்பினோம். என்நண்பன் செல்வராஜ் அன்றிரவு ஏழுமணிவண்டியில் தன்ஊருக்குப் புறப்பட்டுப்போனான்.

பங்குனிமாதம் 18-ம்திகதி. அர்ச். சூசையப்பர் திருநாளுக்கு முன்தினநாள். மடத்துக்கோவிலில் வழக்கம்போல் பூசைசெய்தேன். பூசைமுடிந்தபின் அர்ச். சூசையப்பரின் வல்லமையைப்பற்றி ஒருசிறுபிரசங்கமும் செய்தேன், மறுநாள் மடத்துத் திருநாள். ஆகையால் பிள்ளைகளிடம் பாவசங்கீர்த்தனம் கேட்டுவிட்டுக் கோவிலிலிருந்து வெளியேவரும் போது மணி 9-30 இருக்கும். அப்போது தாயார் ஒருபெரிய பார்சலுடன் ஓடிவந்தார். வந்து,''சுவாமி! சுவாமி!! பாருங்கள்சுவாமி! அர்ச். சூசையப்பர் எங்கள் மன்றாட்டைக் கேட்டுவிட்டார்; பாருங்கள் என்ன அழகான பூசைப்பாத்திரம். யார் அனுப்பியதென்று தெரியவில்லை'' என்று ஆச்சரியமும்ஆனந்தமும் கலந்தகுரலில் கூறிக்கொண்டே ஒருதங்கப் பூசைப்பாத்திரத்தை வெளியிலெடுத்தார். என்கண்களை நம்பமுடியவில்லை. பூசைப்பாத்திரத்தைக் கையில்வாங்கிப் பார்த்தேன். அது கண்ணைப்பறித்தது. பெயர் ஏதாவது பாத்திரத்தில் பொறிக்கப்பட்டிருக்குமா என்று பார்த்தேன். ஆனால்ஒன்றும்காணப்படவில்லை. ''பார்சலைச் சரியாய்ச் சோதித்துப்பாருங்கள் தாயாரே! ஒருவேளை ஏதாவதுகடிதம் இருக்கும்''என்றேன். தாயார் பாத்திரம் வந்த பெட்டியிலிருந்த தாள்களை வெளியிலெடுத்தார், கடிதம்ஒன்றுமில்லை. ஆனால், ஏதோ எழுதியிருந்த தாள் அகப்பட்டது.

மெய்விவாகத்தின் மேன்மை

வே. அன்ரணி ஜோண்

இறைவன் நீலவானிலே சூரியனையும், சந்திரனையும், நாரகைகளையும் மண்ணிலே மரங்களையும், மிருகங்களையும், புல்பூண்டுகளையும் கடலிலே மீன்களையும் படைத்தார். இவைகள் அனைத்தையும் மனிதனுக்காகப் படைத்தார். மனிதனைப் படைக்கமுதல் இவைகளைப் படைத்தார். பின் தமதுசாயலில் மனிதனைப்படைத்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாகக் கடவுள் படைத்ததன் நோக்கம், இவ்விருபாலாரும் ஒன்று சேர்ந்து, ஒருகருத்தோடு இணைந்து, பலாத்காரமின்றிச சுதந்திரத்தோடு தங்கள் சம்மதத்தைத்தெரிவித்து, இருவரும்கணவரும், மனைவியாகவும்வந்து பிள்ளைகளைப்பெற்று வளர்த்து, கடவுளின் படைப்பில் பங்குபற்றவேண்டும். அமலநாட்டுக்குகந்த நகரவாசிகளாய்த் தம் பிள்ளைகளை ஆயத்தம் செய்யவேண்டும். மெய்விவாகத்தின் மேன்மையையும், மகிமையையும் கடவுள் அறிந்தார் எனவே, ஆதாமையும், ஏவாளையும் ஆசீர்வதித்தார். பெருகிப் பலுகிப் பூமியை நிரப்புங்கள்எனக் கட்டளையையும் கொடுத்தார் கடவுள். ஒழுங்கையும், இனிமையையும் படைத்த கடவுள் மனிதனின் வாழ்க்கையிலே தனிமையைக் கண்டார். மனிதன் தனிமையாய்இருப்பதுநல்லதல்ல. அவனுக்குச் சரியொத்த ஒருதுணைவியைக் கொடுப்போம்என்றார் கடவுள். பின் கடவுள் ஆதாமுக்கு அசந்தநித்திரையை உண்டுபண்ணி, அவனின் விலாவிலிருந்து ஏவாளைப் படைத்தார். ஏவாளைக்கண்ட ஆதாம் சந்தோஷ அக்களிப்பினால் இவள் என்எலும்பின் எலும்பாகவும், சதையின் சதையாகவும் இருக்கிறாள் என்றான். ஒருமாமிசத்தில் இருவராயிருப்பர். ஒரு சம்மதத்தினால் ஒருஅன்பில் கலந்துள்ளார்கள். இவர்களின் அன்பின்பழமே இவர்களின் பிள்ளைகள். ஒருபுருஷன் தன் தந்தையையும், தாயையும் விட்டுத் தன்பத்தினியோடு ஒன்றித்திருப்பான்.

அர்ச். சின்னப்பர் மெய்விவாகத்தின் மகிமையை வர்ணிக்கையில் இப்படிக் கூறுகிறார். ''யாவருக்குள்ளும் விவாகமானது சங்கைக்குரியதாயும், விவாகமஞ்சமானது அசுசிப்படாததாயும் இருப்பதாக.'' திரும்பவும் கொரிந்தியருக்கு எழுதும் நிருபத்தில், ஏழாம்அதிகாரத்தில் அர்ச். சின்னப்பர் கூறுகிறார்: ''புருஷன் தன் மனைவிக்குத் தக்கடமையைச் செலுத்துவானாக. அவ்விதமே மனைவியும் தன்புருஷனுக்குச் செய்யக்கடவாள். மனைவியின் சரீரத்தின்மேல் புருஷனுக்கேயன்றி அவளுக்கு அதிகாரமில்லை. அப்படியே புருஷனுடைய சரீரத்தின்மேல் மனைவிக்கன்றி அவனுக்கு அதிகாரமில்லை.'' கணவனுக்கும், மனைவிக்கும் இடையே இருக்கும் அன்பையும், ஒற்றுமையையும்காட்ட அர்ச். சின்னப்பர் கிறிஸ்துநாதருக்கும், திருச்சபைக்கும் இடையில்நிலவும் அன்பை உதாரணமாக எடுக்கிறார். அப்படியாயின் மெய்விவாகத்தின் பெருமையை என்னென்று கூறுவது. கிறிஸ்துநாதர் திருச்சபைக்குத் தலைவராய் இருப்பதுபோலப் புருஷன் தன்மனைவிக்குத் தலைவனாயிருக்கிறான். திருச்சபை கிறிஸ்துநாதருக்குக் கீழ்ப்படிவதுபோல,மனைவிமார் சகலத்திலும் புருஷர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். புருஷர்களே, கிறிஸ்துநாதர் திருச்சபையைநேசித்து, அதற்காகத் தம்மைத்தாமே கையளித்ததுபோல, நீங்களும்உங்கள் மனைவிமாரை நேசியுங்கள். ஒருவனும் தன் மாமிசத்தைப் பகைப்பதில்லை. கணவனும், மனைவியும் ஒருமாமிசமாயிருப்பதால், இருவரும் ஒருவரைஒருவர் நேசிக்கவேண்டும். மெய்விவாகம் ஒருபெரிய தேவதிரவிய அனுமானமாயிருக்கிறது. ஒவ்வொரு கணவனும் தன்மனைவியைத் தன்னைப்போல் நேசிப்பானாக. மனைவி தன் புருஷனுக்குப்பயந்து நடப்பாளாக. உண்மையான அன்பு ஒருவரை ஒருவர் பார்ப்பதில் தங்கியிருப்பதல்ல. இருவரும் ஒரேகருத்தில் நிலைத்திருப்பதிலேயே தங்கியிருக்கிறது.

மெய்விவாகத்தின் மகத்துவத்தையும், மாட்சிமையையும்காட்ட கிறிஸ்துநாதர்தாமே தமது பகிரங்கசீவியத்தில் முதல் புதுமையைக் கானாஎன்னும் நகரத்தில்நடந்த கலியாணவைபவத்தில் செய்துள்ளார். அக்கலியாணவைபவத்தில் கலந்துகொண்டார். மெய்விவாகத்தை ஒரு தேவதிரவிய அனுமானமாகவும் உயர்த்தியுள்ளார். என்னே! மெய்விவாகத்தின்மேன்மை. கடவுள் மனிதகுலம் பெருகிப்பலுகிப் பூமியைநிரப்பவிரும்புகிறார். இது மெய்விவாகத்தால் மாத்திரமே முடியும். எனவே, கடவுள் இதைவிரும்புகிறார். மெய்விவாகம் நல்லது. போற்றத்தக்கது. மெய்விவாகமின்றி நல்லகுடும்பம் இல்லை. நல்லகுடும்பம்இன்றி நல்லநாடு இல்லை.

தாயார் ஆவலுடன் அதைவாசித்தார்: அர்ச். சூசையப்பர் அனுப்பும் வெகுமதி. உங்கள் மன்றாட்டை அவர் மறக்கவில்லை''. தாயாரின்கண்களில் ஆனந்தக்கண்ணீர் துளித்தது. அவர் உள்ளம் அர்ச். சூசையப்பருக்கு நன்றி செலுத்திக்கொண்டிருக்கிறது என்று அவர்முகம் காட்டியது. நானும் அவரோடுசேர்ந்து நல்லதந்தை சூசையப்பருக்கு நன்றி செலுத்தினேன். அதன்பின்தாயார் என்னைப்பார்த்து, ''சுவாமி! இதை அனுப்பினது யாராகஇருக்கலாம்? தெரிந்தால் அப்பேருபகாரிக்கு நன்றிகூறி ஒருகடிதம் எழுதலாமல்லவா?''என்றார்.

''அப்பேருபகாரி வேறுயாருமில்லை. எனது கலாசாலைநண்பன் செல்வராஜ்தான். இதோ தபால்முத்திரையைப் பாருங்கள். பார்சல் திருச்சியிலிருந்துவந்திருக்கிறது. நமக்குப் பூசைப்பாத்திரம்ஒன்று தேவையெனத் திருச்சியில் அவனைத்தவிர வேறுயாருக்குத் தெரியும்? அதுவுமன்றி, கையெழுத்தும் அவன்கையெழுத்துத்தான். ஆகையால்,சந்தேகமின்றி அவன்தான் அனுப்பியிருக்கிறான். அவனுக்கே கடிதம்எழுதிவிடுங்கள் நன்றிகூறி. இதோ அவன் விலாசம்''என்றுகூறி அவன் விலாசத்தையும் எழுதிக்கொடுத்தேன். தாயாருக்கு ஒரேஆச்சரியமாய்ப் போய்விட்டது. ''அப்படியாசுவாமி! உங்கள்நண்பரா அனுப்பியிருக்கிறார். எவ்வளவு நல்லவர் அவர். அர்ச். சூசையப்பர் அவரை ஆசீர்வதிப்பாராக'' என்றுகூறினார் உவகை பொங்கும் உள்ளத்துடன்.

S. G.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் பேனை

மறியற்களம் சென்றார்

அண்மையில் எங்கள் பரிசுத்த தந்தை சின்னப்பபாப்பு உரோமாபுரியின் மறியற்சாலை ஒன்றுக்குச் சென்றுவந்தல்லவா? அப்போது நடந்த சம்பவம் இது. பூசையின்பின் கைதிகள் அனைவரும் திரண்டு பாப்புவுக்கு உற்சாகமான வரவேற்புத் தந்தார்கள். அன்பளிப்புகளும் தரப்பட்டன. "இங்கே பாருங்கள்; உங்களுக்கென நாமும் சில பரிசுகள் கொண்டு வந்திருக்கிறோம். ஆளுக்கு ஒரு சிகரெட் பெட்டி இப்போது கிடைக்கும்" என்றார் பாப்பு. பாப்புவின் காரியதரிசி ஓடிவந்தார். பாப்புவின் காதண்டையில் ஏதோ குசுகுசுத்தார். சிறிது நாணம் கலந்த புன்னகையுடன் பாப்பு பேசத்தொடங்கினார். "எம்மை நீங்கள் மன்னிக்க வேண்டும், ஒரு சிறு தவறு" என்றார். சிகரெட் என்றதும் சிந்தை குளிர்ந்த சிறைக்கைதிகள் தவறு என்றதும் மனங்கலங்கினர். சிறையதிகாரிகள் தடுத்துவிட்டார்களோ என எண்ணினர். பாப்பு தொடர்ந்து பேசினார். "ஒவ்வொரு கைதியும் இரண்டுபெட்டி சிகரெட் பெற்றுக்கொள்வான், தவறுதலாக ஒன்று எனக் கூறிவிட்டோம்." கைதிகளோ பலத்த கரகோஷமும் ஆரவாரமும் செய்தனராம்.

பாப்பு கற்பித்த பாடம்

தவறுவது மனித இயற்கை. அதை மற்றவர்கள் சுட்டிக்காட்டும்போது ஏற்றுக்கொள்ள மறுப்பது மனிதரின் தலையாய குற்றங்களில் ஒன்று. ஓர் உன்னத பதவியிலிருக்கும் பாப்பரசர் தமது பேச்சில் விட்ட ஒருசிறு தவறைக் காரியதரிசி எடுத்துக்காட்டியதற்காக வெட்கப்படவில்லை. காரியதரிசியைக் கடிந்துகொள்ளவில்லை. இது ஒரு சிறு கருமம் என ஒதுக்கிவிடவில்லை. உடனடியாகத் தமது தவறைப் பகிரங்கமாகத் திருத்திக் கொண்டார். இந்த உயரிய மனப்பான்மை எம்மிடையேயும் உதிக்குமானால் எங்கள் சிறு தவறுகளையும் திருத்திக்கொள்ள முற்படுவோமானால் அதனால் பெரும் பயன் விளைவது திண்ணம்.

தெரிந்துகொள்ளுங்கள்

* திருவார்த்தை சபையைச் சேர்ந்த மேற்றிராணியார் லீயோ ஆர்ப்பில்ட், அமெரிக்கர். நியூகினியாவில் தொண்டாற்றுகிறார். தமது மேற்றிராசன விசாரணைப் பங்குகளைப் பார்வையிடத் தமது விமானத்தைத் தாமே செலுத்திக் கொண்டு செல்கிறார். கடந்த பதினைந்து வருடங்களிலும் இவ்விதம் 6,000 மணித்தியாலங்கட்கு மேலாக அவர் பறந்திருக்கிறாராம்.

* லண்டனில் சிமித்பில்ட் என்னுமிடத்திலுள்ள புனித பர்த்தலோமேயோ தேவாலயம் 1123-ல் ராகிர் என்ற குருவானவரால் அடியிடப்பட்டது. இக்குருவானவர் முதலாம் என்றி அரசனின் சமஸ்தான வித்தூஷிகராக முன்பு பணியாற்றிப் பின்னர் குருமடம் சென்றவராம்.

* சுவீடனைச் சேர்ந்த புனிதை பிரிட்ஜெட்டுக்குப் பதினைந்து வயது பூர்த்தியாகுமுன்னரே விவாகம் நடந்ததாம். எட்டுக் குழந்தைகட்குத் தாயான இப்புனிதையிடம் பின்னர் பாப்புமார்களும், அரசர்களும் ஆலோசனை கேட்பதற்காக வந்தார்களாம்.

நகைச்சுவை

சிறுபையனொருவனைத் தந்தை உலகில் பெரியநகரமான நியூயோர்க்குக் அழைத்துச் சென்றார். பல இடங்களையும் சுற்றிக் காண்பித்தபின் எம்பயர் ஸ்டேட் கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றார். உலகில் மிக உயரமான கட்டிடம் அது. எலிவெட்டர் எனப்படும் மின்தூக்கியில் அவர்கள் அமர்ந்து கொள்ள அது அவர்களை உயரே கொண்டுசென்றது. ஒவ்வொரு மாடித் தளமும் சொற்பநேரத்தில் அவர்கள் முன் தோன்றிக் கீழே சென்றது. அந்தரத்தில் பறப்பது போன்ற உணர்ச்சியை அடைந்த பையன் மின்தூக்கி 62-வது மாடியைக் கடக்கும்போது தந்தையிடம் கேட்டான்: "அப்பா, நாங்கள் வருவதைச் சின்ன யேசுவும் தேவமாதாவும் அறிந்திருப்பார்கள் அல்லவா?

வண. லோங் சுவாமியார்

நிகழும் சித்திரைத் திங்கள் 30ஆம் தேதி வியாழக்கிழமை வண. T. M. F. லோங் சுவாமியார் மரணத்தியில் மறைந்த 3-ம்வருட நினைவு தினமாதலால் அன்றினம் காலை 6-15 மணிக்கு ஆசனக்கோவிலில் ஒப்புக்கப் பாடற்பூசை நடந்தேறியது. இதனைக் கண்ணுறும் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர், மாணவர் மற்றும் அன்பர்கள், அனுதாபிகள் அனைவரும் அவரது ஆன்ம சாந்திக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நம்பலி

நீங்கள் ஆவலுடன்
விரும்பிக்கேட்ட
சில காலமாக விற்பனைக்கு
எம்மிடம் இல்லாதிருந்த
"நம்பலி"

எனும் புத்தகம் தற்போது
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்டுள்ளது.
தேவையானோர் கீழ்வரும்முகவரியில்
பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

செப அப்போஸ்தல சபை

பொதுக்கருத்து:

அடிக்கடி பாவசங்கீர்த்தனம் பண்ணும் பழக்கத்தை நாம் மெச்சி, அதில் நன்மைபெறுவதற்காக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:

குஷ்ட ரோகருக்காக மன்றாடிக் கொள்வது.

மலர்ந்தது வைகாசி மாதம்

நீங்கள்
மாதாவின் மலர்ப்பாதத்தை
அலங்கரிக்க வேண்டுமா?

புதியனவும்
அழகு நிறைந்தனவுமாகிய
பூங்கொத்துகளுக்கு
இன்றே எழுதுங்கள்.

குறித்த தவணையில்
பெற்றுக்கொள்ளக் கூடிய
பிரதம மலர் வர்த்தக தாபனம்

எஸ். ஏ. பெர்ணண்டோ,
தபாற்பெட்டி இல. 16
நுவரெலியா.

தந்தி: பாத்திமா — தொலைபேசி: 283

உல்லாச வேகை

(-5ம் பக்கத்தொடர்ச்சி)

பார்க்கவில்லை. என்னுடைய புதல்வி கத்தோலிக்கரைத் திருமணம் செய்து கொள்வதால் என்னுடைய பதவிக்கோ அல்லது அடுத்த பொதுத்தேர்தலில் எனது நிலைமைக்கோ ஆபத்து ஏற்படினும் பரவாயில்லை. புதல்வியின் மகிழ்ச்சியே எனக்கு முக்கியம்எனப் பகிரங்கமாகச் சொலலிவிட்டார் அந்த அமெரிக்க அதிபர்.

இயுஜீன்: அமெரிக்கா என்றவுடன் இப்போது ஆரம்பமாகியுள்ள நியூயோர்க் சர்வதேச கணகாட்சி தான நினைவுக்கு வருகிறது. மைக்கல் ஆஞ்சிலோவின் வியாகுலத்தாய் இப்போது பார்வையாளர்களைப் பெருமளவில் கவர்ந்திழுப்பார் அல்லவா?

அகஸ்ரீன்: வத்திக்கான் மண்டபத்தை மணிக்கு 6,000பேர்வீதம்பார்வையிடுகிறார்களென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கணக்குப்படி 150லட்சம மக்கள் ஐப்பசித்தொடக்கத்தில் கண்காட்சியை மூடிக்குமபோது வியாகுலத்தாயைத் தரிசித்திருப்பார்கள்.

அப்பா: வத்திக்கான் மண்டபத்தில் "கிறீஸ்து அனுபவத்துகிறார்," "கிறீஸ்து போதிக்கிறார்," "கிறீஸ்து புனிதப்படுத்துகிறார்" என்ற மூன்று பெரும தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டு காட்சிகள் நடாத்தப்படுகின்றனஎனக் கிளாஸ்கோ ஒப்சேர்வர் பத்திரிகை கூறுகிறது.

அகஸ்ரீன்: 30லட்சம் டாலர் செலவில் கர்தினல் ஸ்பெல்மன் தலைமையில் உருவான இந்த வத்திக்கான்மண்டபத்தில் மைக்கல் ஆஞ்சலோவின் "வியாகுலத்தாய்" உயிரோவியம்தவிர வேறும்பல சிறப்புகள்உண்டு. கத்தோலிக்க திரைப்படங்கள் தினசரி திரையிடப்படுகின்றன.

✝

வண. எஸ். ஏ. பெஞ்சமின் சுவாமி அவர்களின்

26-ம் வருட நன்மரண ஞாபகம்

"தேவனில் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்."

"ஜீவியத்தில் நேசித்தோம், மரணத்தில் மறவோம்."

"நித்திய பிதாவே, உமது திருக்குமாரனின் விலைமதியாத திருஇரத்தத்தின் பேறுபலன்களினால் மரித்த பெஞ்சமின் சுவாமி அவர்கள் ஆத்மத்தின் பேரில் இரக்கமாயிரும்."

என்னை விட்டுப் பிரிந்தாலும் என் நினைவைவிட்டு என்றுமே அகலாத வண. எஸ். ஏ பெஞ்சமின் சுவாமி அவர்கள் இவ்வுலகைநீத்த 26-ம் வருடம் நிகழும் வைகாசித்திங்கள் 13-ம் நாள் வருகிறபடியால் 9-ம்நாள் சனிக்கிழமை வதிரி அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் காலை 6-30 மணிக்கு அவருடைய ஆத்ம இளைப்பாற்றிக்காகத் தக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதைக் கண்ணுறும் சகலரும் இவ்வாத்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்றுமே மறக்கமுடியாத
பி. லுக்கேஸ்பிள்ளை.
கரவெட்டி,

பிழை திருத்தம்

கடந்தவாரக் காவலனில் வெளியான "ஏன் பிறந்தாய் மகனே" என்ற கவிதையை ஆக்கி அனுப்பியவர் செல்வி ரோஜா சாமுவேல் ஆகும். தவறுதலாக வேறொருவர் பெயர் பிரசுரமாகி விட்டது. இத் தவறுதலுக்காக வருந்துகிறோம்.

ஆசிரியர்.

விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்

அதிக லாபத்தைப் பெறுங்கள்!

இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்

ஓட்டோஸ் லிமிட்டெட்,

தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு வைகாசிமாதம் 2-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org